கலா நிலையம்

V7. No. 16. ஏப்ரல் 19, 1934

ஜ

M211, N281 N

N34.7.16

199166

KALANILAYAM தனிப்பிரதி விலை அணு 0-2-6

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞு ஏப்ரல் மீ 19உ [No. 16

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 241
2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 243
3. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 1 களம் 2)
Goldsmith's—"She stoops to Conquer" 245
4. தமிழ் வேதக் கடலமுதம்.
உபய வேதாந்த வித்வான் பிரதிவாதி பயங்கரம்
ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் 247
5. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 5-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 248
6. கம்பராமாயணம்—(நட்புப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 249
7. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(ஜூதாமுராரே ஸூததுலார)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியர் B.A. 252
8. இரவீந்திரநாதர் கட்டுரைகள் — (மனுஷத்வம்)
W. E. அரியநாயகம். B.A; B.D; B.ED &
ஆஷாதேவி. M.A. 253
9. சொல்லூடாட்டம்—2. 255
10. வர்த்தமானம் 256

கலாநிலயம்

கல்சரும் கவிதையும் 5.

கவிதையின் உண்மையும் கவிவரர்தன்மையும் இன்னதென இதுகாறும் தேர்ந்தோம். இனி,மன்பதைத்தொகுதிக்கு அதனான்வரு மரும்பெரும் பயன்களை மதித்திடத் துணிதல் ஏற்புடைத்தாம்.

எங்கெங்கும் கவிதையுடன் சேர்ந்துவருவது இன்பம். இக்கவிதை எங்கெங்குச் சொரியப்பெறினு மங்கங்குள்ள மாந்தர், அவ்வின்பத்துடன் கலந்திருக்கும் ஞானத்தையும் ஏற்பதற்குத் தம் மனத்தைத் திறந்து வைப்பவ ராகின்றனர். புலவர்கள் தம்முடை நூலை முட்டின்றி அரங்கேற்றினாராயினும்தமக்குரியமுழுப் புகழையும் அன்றைக்கே எய்திவிட்டவ ராகார். அச் சங்கத்திருந்தவனையோரும்அரங்கேற்றமிப்புலவனுக்குப் பெரும்பாலும் கல்வியாலும் அறிவாலும் ஒத்திருப்பவர், ஒருகாலத்தவர். இன்னார் அந்நூலின்கண் விளங்கும் சில பொருள்களின் மேன்மையைக் கண்டு வியக்கலாம்; நூலினது ஆழத்தைக் கண்டு அதிசயங் கொள்ளலாம்; தாம கற்றனவெல்லாம் எற்றே இவற்கென்று ஒருசிலர் கருத்தழியினும் அழியலாம். எனினும், அந்நூலின் பயனையெல்லாம் பெற்று உய்வதற்குப் பிற்றைநாள்மக்களே உரியவர் ஆகின்றனர். வியப்பினால்மாத்திரமேயன்றிப் பயனையும் அனுபவித்தபின்னர்ப் பாராட்டும் புகழோ முன்னையினும்பெரியதாம். அத்தகைய பயன் அனைத்தையும் அடைய அப்புலவனோடு ஒருகாலத்தவரா யிருந்தவர்களுக்கு இயலாது. அவர்களுக்கு நேரமில்லை. நூலினது பொருள், களம் மாறி நம்மிடத்து எய்தும்போது, சிரவணம் மனனம் பாவனை எனப் படிப்படியாய்க் காலவளவில் வளர்தல் முறைமை. சிரவணம் என்பது கேட்டல். கேட்டவற்றைச் சிந்தையி லிருத்தி எஞ்ஞான்றும் உன்னினரா யனுபவித்தல் மனனம். இன்னபடி மனனம் செய்வதால் சிந்தித்த பொருளின் தன்மையைச் சிந்தித்தவரடையும்படி புரிவது பாவனை. இப்பாவனை முதிர்ந்து அப்பொருளொடு நாம் இரண்டற்ற தன்மையில் ஐக்கியமாகிவிடல் முடிவு. கேள்விக்கினிமையாய், சிந்திப்பதற்குவகையாய், பாவனைக்கேற்ற அழகினதாய்,ஐக்கியத்திற்கு ஆனந்தமயமான பொருள்களை, மொழியாலிசைத்து நல்குகின்றமேன்மை,மனோபாவமென்னும் அத்திப்பிய சக்தியின் பூரணதோற்றமாய மாபெருங் காப்பியங்கள்மாட்டுப் பொலிவுற்று விளங்குகின்றது. இத்தகைய காவியங்கள் கைதருமாயின் கடக்கரும் இடுக்கண் யாதொன்றுமில்லை;எய்துதற் கருமையான ஈசனும் இல்லை. தரும சாஸ்திரங்களெல்லாம்,கவிதை சிருஷ்டித்துக் கொடுத்த நல்லுணர்வுகளையும் அழகிற்கியன்ற சிந்தனைகளையும், வரிசைக்கிரமப்படுத்திவைக்கின்றனவே யன்றி, அவை செய்தனவும் செய்ய வல்லனவும் வேறொன்றும் இல்லை. தருமசாஸ்திரங்களும் நீதிநெறிச் சாரங்களும் அவ்வரிசைக் கிரமப்படி நமது குடிவாழ்க்கையும்மனைவாழ்க்கையும் இடையூறின்றி நடக்குமாறு தக்க முறைகளை அமைத்துத்தந்து உதாரணங்களும் காட்டலாகின்றன.எனினும் அன்னவை வேரின்றிவைத்த மரம்போல் வளராதழியக்காண்கின்றோம். நீதிபோதனைகள் நிறைந்தில்லாததாலோ, மற்று அவைகளை அறியாததாலோ மாந்தர்பால் இந்நாள், பொய்யுங்குறளையும் பயனிலாச்சொல்லும், வஞ்சனையும் வீணவாவும் வெகுளியும், பழிபாவங்களுக் கஞ்சாச் செயல்களும் உலோபமும் மிகமலிந்துகிடக்கின்

றன! நான் நான் எனது எனது எனத் தருக்கித் திரிவதால் சுகம் பலகண்டதாலோ தன்னை மறந்திருக்கக் கணமும் தரியாமல் மாந்தர் திரிகின்றனர்! சட்டங்களும், அவைகளை மீறுவதற்குத் தக்க தண்டனைகளும் அத்தண்டனையைநடத்திவைக்கும்உத்தியோகஸ்தர்களும் எண்ணிறந்திருப்பினும் கொலைக்கும்களவிற்கும் குறைவில்லையே.நீதிபோதனைகளேனும்சட்டவிதிகளேனும் யாவரையும் நல்லாற்றுப் படுத்தியதில்லை. படுத்தவல்ல வன்மை அவைகளின்பா லில்லை.

கவிதையோ இக்கருமத்தை வேறோர் திப்பியவகையில் ஆற்றுதற்குத் தலைப்படுகின்றது. மனதை அகலமாக்கிப் பல்கோடி எண்ணங்கள் அம்மனத்தின்கண் கலந்துவாழஇடமமைத்துத்தருவது கவிதையின்முதற்காரியம். உலகத்தினழகை மறைத்திருக்கும்திரை நீங்க நாடோறும் நாம் பழகியறிந்துள பொருள்களெலாம் கவிதையின் செய்கையால் புதியபுதிய தோற்றத்தைப் பெறுகின்றன. கவிதை காட்டுவனயாவும் நமது உள்ளத்தில் புக்கு, அங்குமோர் பிறவி மீண்டு மெடுக்கின்றனவென இயம்பலாம்;மனனம்செய்தவர் மனத்தில் இவ்விதம் அவதரித்தவைகள், கவிதையின் திகழொளிதயங்கநிலவுவனவாகி,அந்நாள்தொட்டு அவ்வவற்றின் தன்மைகளின் ஞாபகசின்னங்களாயமைந்து எல்லா எண்ணங்களையும்,அவ்வெண்ணங்களை ஆதாரமாகப்பற்றி நிகழும் எல்லாச் செயல்களையும் தம்வயமாக்கிக்கொண்டு அமைதியும் திருப்தியும் அளிக்கின்றன.அறநெறியின் மறைபொருள் அன்பு.அன்பெனப்படுவது, நாமே நம்மைவிட்டு வெளிச்சென்று, நமது உடைமையல்லாத எண்ணங்களிலும் செயல்களிலும் பொருள்களிலும் இருக்கிற அழகினோடு வேற்றுமையின்றி ஐக்கியமாக்கிக்கொள்கின்ற தன்மையேயாம். மிகவும் தகவுடைய நல்லவனென்று ஒருவன் இருக்கவேண்டுமாயின் அவனது மனோபாவம் கடல்போல் ஆழமும் அகலமும் உடையதாய்இருத்தல்வேண்டும்; மற்றவர் நிலையில் தன்னை வைத்துக்கொள்ளக்கூடிய சக்தி அவனுக்கு இன்றியமையாததாம். பிறருடைய இன்பமும் துன்பமும் தன்னுடைய இன்பமும்துன்பமுமே ஆவதும் வேண்டும். அறநெறி நன்மைக்கெல்லாம் ஆதாரமாயிருக்கின்றவோர் இணையிலாக் கருவி இம்மனோபாவம்; கவிதையானது மூலகாரணமாகிய அம்மனோபாவத்தைப் பண்படுத்திப் பெருக்குவதால் அதன் காரியமாய அன்பும், அவ்வன்பின்செயலாகிய அறமும், அவ்வறத்தால்வரும்இன்பமும்யாவும்அக் கவிதையின்பயன்களே யாகின்றன. மனோபாவத்தின் எல்லையைக் கவிதை அகலமாக்குகின்றது. இடமகலவகல அதனை நிறைப்பதற்கு மேன்மேலும் எண்ணங்கள் பெருகவேண்டியது அவசியமாவதால் புதுப்புது உவகைநல்கும் எண்ணங்கள் தொடரவந்து குடிப்புகவே, அவைகளும்முன்னிருந்த எண்ணங்களுக்குஇனமாய வண்ணம்பெற்றுப் பல்வேறு துறைகளிலும் நல்வாழ்வு நிலைத்தவர்களாகின்றோம். ஒவ்வொரு கருமத்திற்கும் ஏற்ற உறுப்புக்கள் நம்பால் இருப்பது போலவே, மனோபாவமானது நம்மை அறநெறியில் நடத்துவதற்கு அமைந்ததோர் உறுப்பு என்னலாம். தேகப்பயிற்சி உடலின் உறுப்புக்களை வலியுறச் செய்வதுபோன்றே கவிதைப்பயிற்சி அம்மனோபாவமெனும் அறத்துறை யுறுப்பிற்கு வலிவு அளிக்கின்றது. ஆதலின் கவியெனுமொருவன், நன்மை தீமை பாவம் புண்ணியம் என்பவைகளைப்பற்றித் தான்கொண்டுள கொள்கைகளைத் தன்னால் சிருஷ்டிக்கப்படும் காவியத்தில் கலக்காதிருப்பது நலம். ஏனெனில், இக்கொள்கைகள் அவனது காலத்தையும் தேசத்தையும்பொருந்தித்தோன்றுவன;கவிதையோ காலதேசநிலைகளோடு ஒருபோதுங் கலவாமல் எக்காலத்திற்கும் எத்தேசத்திற்கும் ஏற்றதோர்தன்மைவாய்ந்தது. காரியத்தின்குணுகுணங்களை வகுத்துக் காட்டுவதிலும் காரணத்தை அமைத்துத்தருவதே உயர்ந்தோர் செய்கையாம்.ஆதலின் மனோபாவத்தினோடு பயில்கின்ற கவிதையைமட்டுமேபற்றித் தமது கவிகளைப் பாடுவார்களாயின் அத்தகைய பெருங்காப்பியம், ஒருநாளும் வற்றாத பேரறிவும் அகமகிழ்வும் வழிந்து பெருகுமொரு பொய்கையாம். அகழஅகழத் தங்கமே விளைகின்ற சுரங்கமும் அதுவே. ஒரு காலத்தார், ஒரு தேசத்தார், கல்வித்திறமைவாய்ந்தவொருவர்,அதன் புதைபொருள்களை எல்லாம் எடுத்துக்கொண்டுவிட்டதாக எண்ணுவாராலும்,மறுகாலத்தார் பிறதேயத்தார் வேறோர் கல்விமான் அதனின்று பின்னும்பின்னும் தத்தந்தன்மைக்குத் தக்கபடி முன்னோர் நினைத்துமறியாப் புதுச்செல்வப் புத்துவகைப் பெற்றுவரக் காண்கின்றோம்.

மனோபாவத்தின் பயிற்சி மிக்கதோர் மகிழ்விற்கே இடமா யிருக்கலாமே யல்லாமல், பகுத்தறிவின் காரியங்களேயல்லவோ உண்மையிலே உபயோகமானவை எனச் செப்புவார் சிலர். இவ் வேற்றுமையில் அடங்கிய கருத்தை ஆராய்ந்து பார்ப்பதன்முன் "உபயோகம்" என்பதன் பொருள் யாதெனத் தேர்தல்வேண்டும். "சொல்வோரிற் கேட்பவர் அருமை" என்றதலைப்பின்கீழ் நாம் 1928-வது ஆண்டு,கவிவர் இரவீந்திரநாதரின் கட்டுரையொன்றைவிளக்கிவந்தபோது அவரது உதவிகொண்டு இவ் "உபயோகம்" என்ற வாசகத்தின் நிலைமையை ஒருசிறிது உரைக்கலாயினோம். பொதுவாக ,இன்பம்அல்லதுநன்மைஎனப்படும்ஒன்றையே சீவகோடிகளனைத்தும் நாடுவதும், நாடிஅதை அடைந்தக்கால் திருப்திபெறுவதுமாகின்றன.இன்பமென்பது இருவகைப்படும். ஒன்று, என்றென்றும் தங்கி எவ்வெவற்றிற்கும் உரியதாய் நிலைத்திருப்பது; மற்றது, சிறப்பாக ஒன்றற்கே யுரியதாய்ச் சிறிதேதோன்றி மறைவது. உபயோகம் என்பது முன்னையதை விளைவிப்பதற்காதாரமாயிருப்பதற்கும் பொருந்தும், பின்னையதை விளைவிப்பதற்கு ஆதாரமா யிருப்பதற்கும்பொருந்தும்.முன்னதாயின்,புலன்களுக்குத் தூய்மையும் நோன்மையும்புரிந்தும்,மனோபாவத்தை விசாலப்படுத்தியும், அறிவிற்கு ஆவியும் அளித்தும், உதவுவனயாவும் உபயோகமானவைகளே. ஆயினும்,விலங்கொடு மக்களுக்குப் பொதுவாய யாக்கையைப்பற்றிய குறைகளை நீக்கியும்,கள்வர்பகைவர்முதலியவர்களால் வரும் கேடுகளினின்று காத்தும்,முழுமூடநம்பிக்கைகளைப் போக்கியும், சுயலாபத்திற்கு இடையூறு இல்லாத போதேனும் மற்றவரும் வாழட்டும் என்றநினைவை வரச்செய்தும்,விவகரிக்கின்றவைகளேஉபயோகமானவை என்றவொரு குறுகிய பொருளும்அதற்கு உளது.

இந்தக்குறுகியபொருளில் உபயோகமானவைகளை விருத்திசெய்கின்றவர்களும் சனவாழ்க்கைக்கு வீணரவர் அல்லர். அவர்கள் செய்யக்கூடியனவும் செய்யவேண்டியனவும் சிற்சில இருக்கி[illegible] உத்தமஉணர்

m211,N28kN
N34.2.16
199166

வினர், உயர்குணத்தவர், வித்தகமேன்மையர் இத்தகைய கருமங்களைக் கைக்கொள்வாராயின், கவிகளது அடிகளையேபின்பற்றிக்காவியங்கள்குறிப்பாலுரைத்தவைகளுக்கு நமது தினசரிவாழ்க்கை ஓர்விருத்தியுரையே என்னும்படிஆக்குவார். அத்தகையோரல்லாதார், தம்கல்லாதவாயையும் பொல்லாதகையையும்கொண்டு ஜனவாழ்க்கையை உழக்கப்புகுவாரேல்,"உபயோகம், உபயோகம்' என்றவொரு முழக்கினால் ஆன்மாவிற்குரிய உயரியநிலையும் உடலிற்காகிய தாழ்ந்தஇடமும் தலைதடுமாறி அலைந்து இரண்டுமே அழிந்திடாமலென் செய்யும். ஆகையால்,பகுத்தறிவுஎன்றபேரைச்சொல்லிக்கொண்டுநமதுமூடநம்பிக்கைகளையும்பழக்கவழக்கங்களையுந்தொலைக்கவருகின்றேன்என்பார்பலர்அதனோடு மாந்தாது மனோபாவத்தில் தொல்லைநாள்தொட்டுப் பொறித்துள சில சாச்வதஉண்மைகளையும்அழித்துவிடுகின்றனர். பூதசாஸ்திரத்தில் தேர்ச்சியுள்ளவர் தொழில்வளர்ச்சிக்கு வேண்டிய எந்திரங்ளைச்செய்து அமைக்க வமைக்க, பொருளாதாரமுறை யறிந்த நிபுணர்கள் முதலாளிக்கும் தொழிலாளிக்கும்பொருள் விளைப்போர்க்கும் விற்போர்க்கும் வாங்குவோர்க்கும் தக்கதிது தகாததுஇது வெனஏற்பாடுகள்செய்யச்செய்ய அரசியல்வாதிளும் அச்சபை அறிஞர்களும் எவ்வளவோசட்டங்களைவிதிக்கவிதிக்க,கார்லைல்சொன்னபடி,வீண்போகமொருபுறமும் வறுமையின்கொடுமை மறுபுறமும்கனற்றலாவதையே நாம் இந்நாள் மேனாடு அடங்கலும், அதனை நீங்காநிழல்போல் தொடர்கின்ற இத்தேயத்திலும் காணலாகின்றோம்.பணக்காரன்பின்னும்பணக்காரனாகின்றான்,ஏழையோ பின்னும் ஏழையாகின்றான், ஜனவாழ்க்கையோ இவ் விரண்டிற்கும் இடையே எற்றுண்டு தள்ளாடுகின்றது, இதுவே நாம் இந்நாள் கண்டபயன். மனோபாவத்தைச்சார்ந்த மூலதத்துவங்களுடன் இணங்குதலின்றி நடக்கும்முறைகள்பற்றி வரம்பிலாமல் கணக்கிடும் திறமையின் செயலெலாம் இப்படியே!

நீதிநெறி அரசியல்முறை சரித்திரப்பாடம்முதலியவைகளைப்பற்றிய அறிவோ நமக்கு வேண்டிய அளவு இருக்கின்றது; அவ்வறிவைப் பழக்கத்தினுட் கொண்டுவருவதற்குத்தான் நாம் இப்பொழுது கற்கமுயல்வதில்லை. மேன்மேலும் இவைகளை ஆராய்ந்து ஆராய்ந்துகொண்டு போய்ப்போய் அவைகளால் எய்தக்கூடிய இலாபத்தைக் கணக்கிட்டுக்கணக்கிட்டுப் பார்ப்பதனிடையே, இவ் விடயங்களைச் சார்ந்த எண்ணங்களில் உறைந்துளகவிதையை அடியுடன் மறந்துவிட்டோம். அறத்துறையிலும் அரசியல்முறையிலும்இவையனையபிறவற்றிலும் தக்கநெறி எதுவென்றஅறிவிலோகுறையில்லை. ஆயினும் அவ்வறிவெலாம்அவலமாய்ப்போவதன்காரணம்யாதெனவினவுவார்ஐயம் இதுவரையில் நாமிங்குஉரைத்துவந்தவைகளினின்றுதீர்ந்திருக்கும். சுருங்கச்சொலலின், அவ்வறிவினோடு அதனைச்சிந்திப்பதற்கு உரிய மனோபாவமும் வேண்டுமே.அம் மனோபாவத்தால் சிந்தித்தபடி செய்வதற்கியன்ற வண்மையுணர்ச்சியும் வேண்டும்—கவிதையொடு கலந்த வாழ்க்கை நமக்குவேண்டும். இவை யில்லாத குறையினாற்றான் அறிவுஞ் செயலும் வேறுகிப்போகின்றன.நாம் போடும்கணக்கெல்லாம் முதலிற்கொண்ட கருத்தைக் கடந்தோடிவிட்டன. நம்முடைய ஜீரணசக்திக்கு மதிகமாகத் தின்றுவிட்டோம்.புறவுலகஎல்லையைப் பெருக்க முயல்கின்ற இச்சாஸ்திரங்களின் பயிற்சி யாவும், அவை கவிதாசக்தியோடு கலவாமையால்,உள்ளுலகத்தைக் குறுக்கிவைக்கின்றன. கடலையுங் காற்றையும் அடிமைகொண்டவர், தாமே பின்னும் அடிமைகளாயிருக்கின்றனர். எனின், முன்னுரைத்த விபரிதங்கள் நேர்வது விந்தையாமோ!

தமிழ்ப்பாடம் 116.

வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[229-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

விதுரன் இயற்றிய விருந்தினை அருந்திக் கண்ணன் உவந்திருக்க அந்தியும் வரலாயிற்று. அந்தியின் வருகை முதலியவருணனைகள் அமைந்த செய்யுள்கள் ஒன்பது இதன்முன் விடலாயின.

பொங்க ராவணை பொலிவறப் போந்தபின் பொதுவர்
தங்கள் பாடியில் வளர்ந்துமா மருதிடைத் தவழ்ந்த
கங்கை மாநதி கால்வழி கருணையங் கடலே
யிங்கு நீதனி நடந்தவா றுரைத்தரு ளென்றான். 46

வந்தசெய்தி யாதெனக் கண்ணனை விதுரன் வினவுகின்றான்.

பதவுரை.

பொங்கு பொங்குகின்ற, அரா அணை - ஆதிசேஷனாகிய பாம்பின் படுக்கை, பொலிவு - பொலிவு, அற - நீங்கும்படி, போந்தபின் - (அப் படுக்கையினின்று) இவ்வுலகு வந்தபிறகு, பொதுவர் தங்கள் - இடையர்களுடைய, பாடியில் - ஊரில், வளர்ந்து - வளர்ந்து, மருது இடை - மருதமரங்களுக்கு இடையிலே, தவழ்ந்த - தவழ்ந்துசென்றவனும் கங்கை மா நதி - கங்கையாகிய பெரிய நதி, கால் - பாதத்திலிருந்து, வழி - வழிந்தோடப்பெற்ற, கருணை - கருணை நிறைந்த, அம் - அழகிய, கடலே, - கடலைப் போன்றவனும் ஆனவனே, நீ - திருமாலாகிய நீ, இங்கு - இந்நகருக்கு, தனி - தனியாக, நடந்த ஆறு - வந்தடைந்த காரணம், உரைத்தருள் - சொல்லி அருள்வாய், என்றான் - என்று விதுரன் கேட்டான்.

கௌரவர் விதித்தபடி காடுசென்று கடவநாள் கழித்துவந்த பாண்டவர்க்குரிய பாகத்தைப் போரில்லாவழி அவர் பெறும்பொருட்டுத் தூதுவந்துளேன் என்று, கண்ணபிரான் விதுரனுக்கு விடை உரைத்ததும், போரொன்று இல்லாமல் பாண்டவர் தம் பாகத்தைத் துரியோதனன் தாரான் என்று விதுரன் மொழிந்ததும் கொண்டுள பன்னிரண்டு பாசுரங்கள் இதற்குப்பின் விடலாயின.

காவன் மன்னவர் முகங்க டோறுமிரு
கண்பரப் பியமர் கருதுவோ
ரேவ லின்கண் வருதூத னுமிடைய
னின்றுநம் மவையி லெய்தினு

லோவ லின்றியெதிர் சென்று கண்டுதொழு
 துறவுகூ றிலினி யுங்களூர்
தீவ லஞ்செய வடர்ப்ப னென்றுநனி
 சீறினன் முறைமை மாறினன். 47

தன் னவையின்கண் கண்ணன் எய்துங்கால், அவனுக்கு முகங்கொடுத்து வரவேற்க லாகாதெனத் தன் பரிஜனங்களுக்குத் துரியோதனன் கட்டளை இடுகின்றான்.

பதவுரை.

முறைமை - ஒழுங்கு, மாறினன் - கடந்தவனான துரியோதனன், காவல் மன்வனர் - காக்கும் தொழிலுடைய அரசர்களது, முகங்கள் தோறும் - ஒவ்வொருவர் முகத்தையும் தனித்தனி, இருகண் பரப்பி - தனது இரு கண்களால் நோக்கி, அமர் கருதுவோர்- போர் செய்யும் கருத்தையுடைய பாண்டவர்களது, ஏவலின்கண் - ஏவலினால், வரு - வந்திருக்கின்ற, தூதன் ஆம் - தூதவனாகிய, இடையன்-இடையனாகிய கண்ணன், இன்று - இன்றைக்கு, நம் அவையில் - நமது சபையினிடம், எய்தினால்-வந்து அடைந்தால், (நீங்கள்) ஓவல் இன்றி - குறைவு இல்லாதபடி, எதிர்சென்று - வரவேற்க எதிரே சென்று, கண்டு- அவனைக்கண்டு, தொழுது - வணங்கி, உறவு கூறின் - சினேகம் பாராட்டுவீர்களேயானால், இனி - அதன் மேல்,

உங்கள் ஊர் - உங்களது ஊர்களை, தீ வலம் செய- நெருப்புச் சூழும்படி செய்து, அடர்ப்பன் - போர் செய்வேன், என்று - என்று கூறி, நனி சீறினன் - அதிகமாகக் கோபித்துக்கொண்டான்.

விரிவுரை:-துஷ்டாரது குணங்களும், அவர்களுக்கு வரவிருக்கும் கேட்டிற்கு முன் னறிகுறியும் இவையென்பதும், இச்செய்யுளில் நன்கு விளங்குகின்றன. கண்ணபிரானும் ஓர் வேந்தனேயாயினும் சாதியில் இடையன் என்று துரியோதனன் அவனை இகழ்ந்தது ஒன்று. இனி, கண்ணனே பரமபதநாதன் என்பது துரியோதனன் அறியாததும் அன்று. ஈச்வரனை எதிர் சென்று வணங்கி வழிபடவேண்டாவென்று மற்றவர்களைத் தகைதலும் தீக்கொண்டு அவரை அச்சுறுத்தி நீக்குவதும், தானும் பாழாகி மற்றவரையும் பாழாக்க முயன்றுநிற்போர் சொல்லும் செயலுமாம் என்பது இத்துரியோதனனிடத்தில் தோன்றலாகின்றது. எக்காலத்திற்கும் இயைந்ததோர் இயற்கை யிது.

துன்னு கங்கை மகனுந் துரோணனொடு
 சுதனு நீதிபுனை விதுரனு
மன்னர் மன்னனை யொழிந்த மன்னவரும்
 வந்து சேவடி வணங்கினர்
கன்ன னுந்தலை கவிழ்ந்திருந்தன
 னழன்றுளஞ் சகுனி கருகினன்
முன்ன நின்றவர்க ளிட்ட பீடமிசை
 மொய்துழாய் முகிலு மெய்தினன் 48

துரியோதனன், கர்ணன், சகுனிஎன்னும்இம் மூவரைத்தவிர மற்றெல்லோரும் கண்ணனை வணங்கி வரவேற்றனர்.

பதவுரை.

துன்னு கங்கை மகனும் - நீர் அடர்ந்த கங்கையின் மகனான பீஷ்மனும், துரோணன் ஒடு - துரோணனுடன், சுதனும்-அவன் மகனாகிய அச்வத்தாமாவும், நீதி - நீதியை, புனை - ஆபரணமாக அணிந்திருக்கின்ற, விதுரனும் - விதுரனும், மன்னர் மன்னனை - மன்னர்க்கெல்லாம் மன்னனான துரியோதனனை,ஒழிந்த- தவிர்ந்த, மன்னவரும் - எல்லா அரசர்களும், வந்து- கண்ணபிரானுக்கு எதிர்வந்து, சே அடி - (அவனது) சிவந்த பாதங்களை, வணங்கினர்-வணங்கினர்கள்.

கன்னனும் - கர்ணனும், தலைகவிழ்ந்து - வெட்கத்தால் குனிந்துகொண்டு, இருந்தனன் - இருந்தான். சகுனி - சகுனியானவன், உளம் அழன்று - உள்ளம் தீப்பற்றி எரிய, கருகினன் - கருகினன்.

மொய் - அடர்ந்த, துழாய்-துளசிமாலை அணிந்த, முகிலும் - மேகம்போன்ற கண்ணனும், முன்னம் நின்றவர்கள்-தன்முன்னேநின்றவர்கள், இட்ட-போட்ட, பீடமிசை - ஆசனத்தில், எய்தினன் - அமர்ந்தான்.

விரிவுரை:—"தீ வைத்து உங்களூர்களை அழித்திடுவேன், எதிர் சென்று யாவரும் வணங்காதீர்" என்று துரியோதனன் இட்டிருந்த கொடிய கட்டளையை மதியாமல்மன்னரனைவரும், பீஷ்மன் துரோணன்முதலாயினோரும்மீறினர். ஈசுவரனைத் தாம் நேரே கண்டபின் அவனை இறைஞ்சாமல் மனிதனொருவனது உத்தரவு தடுப்பதுஇயலாது. கயவரினுங்கடையான கயவராகிய துரியோதனனும் சகுனியுமேசும்மாவிருந்தனர். 'விதித்தபணி மறுத்து இவ்வண்ணம் நம் கண்முன்னே போய் அப் பகைவனது காலிலே விழுகின்ற இம்மன்னவர்களை நம்பியோ நாம் இனிப் பாரதப்போர் புரியவேண்டும்' என்ற வெறுப்பும் அச்சமும் மிகுவதால் சகுனி அழன்று உளம் கருகலாயினன். இத்துரியோதனனது சோற்றைத் தின்றிருப்பதனாலன்றோ, எம்பெருமான் எளிதினில் வந்துஎய்தவும் தான் சென்று எதிர்கொள்ளாமற்கிடக்கலாயிற்று. என்ற பரிபவமும் இரக்கமும் மிகுந்ததால் தலைகவிழ்ந் திருந்தனன் கர்னன். இதனைக் கருதியே பின்னர்ப் போர்க்களத்தில் உயிர்நீங்கும் தருணத்தில், துரியோதனனுக்குத் தான் செஞ்சோற்றுக் கடன்கழித்த கொள்கையைக் கூறுகின்றான் கர்னன்.

இலக்கணம்.

C. மூன்றும் வேற்றுமை.

மூன்றும் வேற்றுமைக்கு உரிய உருபுகள், ஆல் ஆன் ஒடு ஓடு உடன், என்பன. வாளால் குத்தினன், இராமனொடு சென்றான் என்பனபோல் வேற்றுமைஉருபு விரிந்து வருதலும், தலை வணங்கினன் (தலையால் வணங்கினன்) என்பதுபோல் வேற்றுமை உருபுமாத்திரம் தொக்குவருதலும், இரும்புப்பெட்டி (இரும்பால் செய்த பெட்டி) என உருபும் பயனும் உடன் தொக்கு வருதலுங் கூடும்.

I. நிலைமொழி ஒடு அல்லது ஓடு என்னும் மூன்றும் வேற்றுமை உருபுபெற்ற சொல்லாயின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது:—

தாயொடு + கன்று = தாயொடுகன்று
புகழோடு + செல்வம் = புகழோடுசெல்வம்
யாரொடு + சொல்வேன் = யாரொடுசொல்வேன்
வில்லோடு + கணை = வில்லோடுகணை

II. மூன்றும் வேற்றுமை உருபுமாத்திரம் தொக்கிருக்கின்றதொகைநிலைத்தொடர்கள் அதிகம்வழங்குவதில்லை. மூன்றும் வேற்றுமைத்தொகை எனக் கருதக்கூடிய சிலதொடர்கள் பெரும்பாலும் ஏழாம்வேற்றுமை இடப்பொருளைக் குறித்தலுங் கூடும். தலைசுமந்தான், என்பது தலையால் சுமந்தான் என்ன மூன்றன் தொகை யாகலாமாயினும், தலையிற் சுமந்தான் என ஏழாம் வேற்றுமையாக விரியினும் விரியலாம்.

செய்வினைகள் சிலபோது செயப்பாட்டு வினைப் பொருளில் வருதல் கூடுமென்பதை முன்னர்ச்சொல்லியிருக்கின்றோம் (5வதுவால்யூம், 984-வதுபக்கம்). செயப்பாட்டுவினைப் பொருளுடையவாய், செய்வினை உருவத்துடன் வருகிற சொற்களுக்குமுன் நிற்கின்ற பெயர்கள்மூன்றனுருபு தொக்கவைகளாதல்கூடும்:—

பாம்பு கடித்த பையன்—இதனில் கடித்தஎன்னுஞ் சொல் செய்வினை உருவத்திலிருந்தாலும், கடித்ததாகிய காரியத்தைச் செய்வதன் பையனல்லன். கடித்தலாகிய காரியத்தைச் செய்யப்பட்டவன்அவன். ஆகையால்,பாம்பினால்கடிக்கப்பட்ட பையன் என்பதுபொருள். எனவே, "பாம்பினால் கடிக்கப்பட்ட (பையன்) என விரியவேண்டும். இது மூன்றன் தொகை. தமிழில் செயப்பாட்டுவினையை (Passive voice) அதிகம் பயில்வதில்லை. செயப்பாட்டுவினைப்பொருள் வருதற்கும் செய்வினைகளையே பெரும்பாலும் உபயோகிக்கின்றனர். எனினும், பேய் பிடிக்கப்பட்டான், புலி கடிக்கப்பட்டான், (பேயால் பிடிக்கப்பட்டான், புலியால் கடிக்கப்பட்டான்) எனச் செயப்பாட்டு வினைகளுக்குமுன் மூன்றும்வேற்றுமை தொக்க பெயர்கள் நிற்பதும் உண்டு.

(1) நிலைமொழி, மூன்றும்வேற்றுமை உருபுமாத்திரம் தொக்கு, உயிரிலேனும் யகர ரகர ழகர மெய்களிலேனும் முடிகிற பெயர்களாயிருக்க, வருமொழி முதலில் வல்லினமெய்வருமானால் அவ்வல்லினமெய் மிகுவதில்லை:—

பாம்பு + கடித்த(பையன்) = பாம்புகடித்த(பையன்)
துயர் + பிடித்த(வேந்தன்) = துயர்பிடித்த(வேந்தன்)
பேய் + பிடிக்கப்பட்டான் = பேய்பிடிக்கப்பட்டான்
புலி + கடிக்கப்பட்டான் = புலி கடிக்கப்பட்டான்
பறை + சாற்றினன் = பறைசாற்றினன் (பறையால் சாற்றினன்).

(2) நிலைமொழி ஐகாரத்துடன் சேராத, ஓரெழுத்து ஒருமொழியா யிருக்குமாயின், மூன்றன்தொகையில் வருமொழி வல்லினமெய் மிகும்.

தீ + சுட்டான் = தீச்சுட்டான் (தீயால் சுட்டான்)

குறிப்பு:—கைகாட்டினன் (கையால் காட்டினன்), கைதீண்டினன் (கையால் தீண்டினன்), என ஐகாரத்துடன் சேர்ந்து வருகின்ற ஓரெழுத்தொருமொழிகளுக்குப்பின் மிகுவதில்லை.

(3) நிலைமொழி இரண்டு எழுத்துக்களால் ஆன சொல்லாயிருந்து, அவைகளில் முதலெழுத்துக் குறிலும், மற்ற எழுத்து நெடிலுமாய் அமையுமாயின், மூன்றன் தொகையிலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்:—

அரா + கடிக்கப்பட்டான் = அராக்கடிக்கப்பட்டான்
சுறா + பாயப்பட்டான் = சுறாப்பாயப்பட்டான்

(4) மூன்றும் வேற்றுமைத்தொகைநிலைத்தொடர்கள் சிலவற்றில் வல்லினம் மிகுந்தும் மிகாமலும்புணராலாகின்றது:—

பேய் + கோட்பட்டான் = பேய்க்கோட்பட்டான் (அல்லது) பேய்கோட்பட்டான்
புலி + கோட்பட்டான் = புலிக்கோட்பட்டான் (அல்லது) புலிகோட்பட்டான்
(கோட்பட்டான் = பிடிக்கப்பட்டவன்)

III. மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில், வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தே புணரும்:—

வெள்ளி + கிண்ணம் = வெள்ளிக்கிண்ணம், (வெள்ளியால் செய்த கிண்ணம்)
இரும்பு + பெட்டி = இரும்புப் பெட்டி.
கவி + கூற்று = கவிக்கூற்று (கவியினால் கூறப்பட்ட கூற்று)
உகிர் + குறி = உகிர்க்குறி (உகிரினால் செய்த குறி) (உகிர் = நகம்)
தவ(ம்) + புதல்வன் = தவப்புதல்வன் (தவத்தினால் பிறந்த புதல்வன்)
மெய் + போர் = மெய்ப்போர் (மெய்யால்செய்யும் போர்) மெய்—உடல்
ஊழ் + பயன் = ஊழ்ப்பயன். (ஊழால்வரும் பயன்)

குறிப்பு:—இவைகளிற் சிலவற்றை ஆறும் வேற்றுமைத் தொகைகளாகவும் கொள்ள இயலும். ஆறும் வேற்றுமைத் தொகையிலும் வல்லினம்மிகுமாதலால் இப் புணர்ச்சிவிதிவரையில் பேதமில்லை.

இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

[204-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 1. களம் 2.

இடம்:— சாராயக்கடையில் ஓர் அறை.

டோனி ஒரு மேடையில் உட்கார்ந்திருக்கின்றான். தாழ்ந்தவகுப்பைச் சேர்ந்தவர்களும் அழுக்குத்துணி உடுத்திருப்பவர்களும் ஆகிய பலர், சாராயபுட்டியுங் கையுமாய்ப் புகைச்சுருட்டுப் பிடித்துக்கொண்டு அவனைச்சுற்றி உட்கார்ந்துகொண்டிருக்கின்றனர்.

* * *

எல்லோரும் :—பலே, பலே, பலே, பேஷ், பேஷ்!

ஒருவன் :—இதோ, கொஞ்சம் சும்மா இருங்கள். நம்பிரபுஇப்பொழுது ஒருபாட்டுப் பாடப்போகிறார்.

எல்லோரும் :—ஆமாம், பாட்டு, பாட்டு, ஒரு பாட்டு.

டோனி :—ஆனால், கேளுங்கள், இந்தச் சாராயக்கடையின்மேல் நான் கட்டியிருக்கிற ஒரு பாட்டைப் பாடுகிறேன், கேளுங்கள். (பாடுகிறான்).

எல்லோரும்:—பலே, பலே, பேஷ்!

ஒருவன்:—நம்ம துரை ஜோரான துரை.

மற்றொருவன்:—அவர் பாட்டென்றால் எனக்கு எப்பொழுதும் ஆசை. கௌரவம்கெட்டு அவர் ஒரு போதும் நடப்பதில்லை.

இன்னொருவன்:—கௌரவமாயிருப்பது எப்பொழுதும் கௌரவந்தான். மனிதன் மாத்திரம் ஒரு போதும் மரியாதை கெடக் கூடாது.

வேறொருவன்:—நன்றாய்ச் சொன்னாய்! நான் கரடியை ஆட்டுகிறவனா யிருந்தால்தான் என்ன. கரடி

யாட்டியுங்கூட மரியாதையா யிருக்கக்கூடும். என் கரடி தாளங்கெட்டுக் குதிக்குமானால் நான் குடிக்கும் இந்தச் சாராயம் எனகு விஷமாகப் போகட்டும்.

மற்றொருவன்:—நம்ம துரையின் சொத்து சுதாங்களெல்லாம் இன்னும் அவர் கைக்கு வரவில்லையே. அப்பொழுது, இதைச்சுற்றிப் பத்துமைலிலிருக்கும் சாராயக்கடைகளுக்கெல்லாம்நல்லகொண்டாட்டம்.

டோனி:—ஏகே! அப்படித்தான். அப்பொழுதல்லவோ, சிநேகிதர்களைப் பொறுக்கி எடுத்துக்கொள்வது எப்படி யென்று காட்டுவேன்.

இன்னொருவன்:—இவர் தன் தகப்பனை அப்படியே கொண்டிருக்கிறார். நம்ம பெரியதுரை லம்ப்கினைப்போல இனிமேல் கிடைப்பார்களா! நல்ல வேட்டை ஆடுவார். கொம்பு ஊதினாலும் சரி, முசலைத் துரத்தினாலும் சரி, பெண்பிள்ளைகள் பிடிச்சாலும் சரி, அவருக்குச் சமானம் இல்லை. நல்லகுதிரைகள் நல்லநாய்கள் நல்ல பெண்கள் அவரைப்போல வைத்திருந்தவர்கள் இல்லை என்று இந்த ஊரெல்லாம் சொல்லுவார்களே.

டோனி:—வயதுவரட்டும், நானும் என்அப்பனுக்குப்பிறந்தவனேஎன்பதைக் காட்டுகிறேன், பார். அது கிடக்கட்டும்; இப்பொழுது குடித்துக் களியுங்களடா பசங்களா; கணக்குக் கொடுக்கப்போவது நீங்களல்லவே—என்ன ஐயா, என்ன செய்தி?

[சாராயக் கடைக்காரன் வருகிறான்]

கடைக்காரன்:—யாரோ இரண்டுபேர் அஞ்சல் வண்டியில் வந்திருக்கிறார்கள். வழிதப்பிவிட்டார்களாம். ஹார்ட்காஸலைப் பற்றி ஏதோ பேசுகிறார்கள்.

டோனி:—அவர்களில் ஒருவன் என் தங்கையைக் கட்டிக்கொள்ள வருகிறவனாக இருக்கவேண்டும். நல்லது, அவர்களை இப்படி வரச்சொல். ஒரு நொடியில் எல்லாம் வழி பண்ணிவிடுகிறேன். [கடைக்காரன் போகிறான்]. பிரபுக்களே, அவர்களுடன் சேர்வது உங்களுக்குக் கௌரவக் குறைவாக இருக்கலாம். ஆகையால், கொஞ்சநேரம் பின்கட்டில்போயிருங்கள்.

[கும்பல் கலைகிறது.]

டோனி:—என் இரண்டாந் தகப்பன், இந்த ஆறு மாத காலமாக என்னை நாயென்றும் பேயென்றும் கூப்பிட்டுக்கொண்டிருக்கிறார். இப்பொழுது நான் மனம்வைத்தால் இந்தச் சுடுமூஞ்சிக் கிழத்தின்மேல் எனக்கிருக்கும் எரிச்சலையெல்லாந் தீர்த்துக்கொள்ளலாம். ஆனால், பயமாயிருக்கிறதே! சீ சீ! எதற்குப் பயம்? சீக்கிரத்தில் நான் வருஷத்திற்கு ஆயிரத்தைந்நூற்றிற் கதிகாரி ஆகமாட்டேனா; அதிலிருந்து என்னைப் பயமுறுத்தித் துரத்தக்கூடுமானால் துரத்தட்டும் பார்ப்போம்.

[மார்லோ, ஹேஸ்ட்டிங்ஸ், என்னும் அவ் விருவரையும் அழைத்துக்கொண்டு சாராயக்கடைக்காரன் வருகின்றான். ஹார்ட்காஸலின் மகளாகிய காதரின் என்பவளை மணம்செய்ய வருபவன் மார்லோ. அவள் உறவினளாகிய நேவில்லி என்பவளைக் காதலித்திருப்பவன் ஹேஸ்ட்டிங்ஸ்.]

மார்லோ:—அப்பா! என்ன பாடுபட்டுச் சலிக்கின்றோம் இன்றைக்கு! நாற்பது மைல்தான் கடக்க வேண்டும் என்றார்கள். நாமோ ஐம்பது மைல்களுக்கு மேல் வந்தாகிவிட்டது.

ஹேஸ்ட்டிங்ஸ்:—எல்லாம் உன்னால்தான், மார்லோ. உன்னுடைய அசட்டு வெட்கத்தால், ஒருவரையும் வழிகேட்க விடவில்லையே நீ.

மார்லோ:—கண்டவர்க்கெல்லாம் கடமைப்பட்டவர்களாக எனக்கு மனமில்லை. மரியாதை கெட்டபதில் கிடைத்தாலும் கிடைத்திருக்கும்.

ஹேஸ்ட்:—தற்காலம், நமக்கு ஒருவிதமான பதிலுமே இங்குக் கிடைக்காதென்று தோன்றுகிறது.

டோனி:—கோபித்துக் கொள்ளாதீர்கள் ஐயா; இந்தப் பக்கங்களில் ஹார்ட்காஸல் என்ற ஒருவரை விசாரிக்கிறீர்கள் என்று தெரிகிறது. இந்தத் தேசத்தின் எந்தப் பாகத்தில் இருக்கிறீர் களென்பது உங்களுக்குத் தெரியுமோ?

ஹேஸ்ட்:—ஒன்றும் தெரியவில்லை, ஐயா, தெரிவிப்பீர்களாயின், மிக்க வந்தனம்.

டோனி:—நீங்கள் வந்தவழியும் தெரியாதோ?

ஹேஸ்ட்:—தெரியாது ஐயா; சொல்வீர்களானால்—

டோனி:—பிரபுக்களே, வேறு என்ன! நீங்கள் போகிற வழியேனும் வந்த வழியேனும், எங்கே இப்பொழுது இருக்கிறீர்கள் என்பதேனும், உங்களுக்குத் தெரியவில்லையானால், நான் உங்களுக்கு முதல்முதல் தெரிவிக்க வேண்டிய விஷயம்—நீங்கள் வழிதப்பிவிட்டீர்கள்—என்பதே.

மார்லோ:—இது சொல்ல, ஜோதிடம் வேண்டியதில்லையே.

டோனி:—நல்லது; நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள் என்பதைக் கேட்டாலாவது பயனுண்டோ, தயைசெய்து சொல்லுங்கள்.

மார்லோ:—நாங்கள் போகவேண்டிய இடத்தைக் காட்டுவதற்கு, எங்கிருந்துவந்தோமென்பது அவசியமில்லையே.

டோனி:—கோபித்துக் கொள்ளாதீர்கள். கேள்விக்குக் கேள்வி நியாயந்தானே. தயைசெய்து ஒன்று சொல்லுங்கள், ஐயா. இந்த ஹார்ட்காஸல் என்பவன், ஒரு சுடுசுடுத்த கோணமூஞ்சிக் கிழப்பயல்தானே. அவனுக்கு ஒரு பெண்ணும் அழகிய ஒரு பிள்ளையும் இருக்கிறார்கள், அல்லவா?

ஹேஸ்ட்:—நாங்கள் அவரைப் பார்த்ததில்லை. ஆயினும், நீ சொல்கிறபடி அவருக்குக் குடும்பம் உண்டு.

டோனி:—அந்தப் பெண், பனைமரம்போல் வளர்ந்தவொரு வாயாடிக்குண்டுணி யல்லவா? பிள்ளையோ, அழகுடையவன், ஒழுங்குடையவன், எல்லாராலும் விரும்பப்படுவன், அல்லவா?

மார்லோ:—நாங்கள் கேள்விப்பட்டிருப்பது இதனிற்கு மாறாக இருக்கிறது. ஒழுங்காக வளர்ந்தவளும் அழகாக இருப்பவளும் அவர் பெண்ணே யென்று சொல்கிறார்கள். தன் தாயின் முன்தானையைப் பிடித்துக்கொண்டே வளர்ந்து ஒழுக்கங்கெட்ட குரூபக் குரங்காம் அவர் பிள்ளை.

டோனி:—ஹூம்...ஹூ-ஹூ - ஹூம் - அப்படியானால், பிரபுக்களே, நானுங்களுக்குச் சொல்லவேண்டியதெல்லாம் இவ்வளவுதான்—அதாவது, நீங்கள் இன்றைய இரவு ஹார்ட்காஸல் வீட்டிற்குப் போய்ச் சேரமாட்டீர்கள்—என்பதே.

ஹேஸ்ட்:—எங்கள் துர்அதிர்ஷ்டந்தான்!

டோனி:—அந்த வழி, மிகவும் இருட்டானது, சேறானது, அழுக்கானது, அபாயமானது. [கடைக்காரனைப் பார்த்துக் கண்ணடித்து] ஐயா, ஹார்ட்காஸல் வீட்டிற்குப்போகும் வழியை இவர்களுக்குச் சொல். முழங்கால்சேற்று மூலையிலிருக்கும் ஹார்ட்காஸல் வீட்டிற்கு—தெரிகின்றதா.

கடைக்காரன்:—ஹார்ட்காஸல் பிரபுவின் வீட்டிற்கா! அடெயடே! எஜமான்களே, அடியோடு வழிதப்பி வந்துவிட்டீர்கள். அந்தக் குன்றின் அடிவாரத்திற்கு வந்தபோது நீங்கள் கிச்சிலிக்காய்ச் சந்தைக் கடந்து போயிருக்கவேண்டும்.

மார்லோ:—கிச்சிலிக்காய்ச் சந்தைக் கடக்கவேண்டுமா?

கடைக்காரன்:—அப்புறம், நாற்சந்திகூடுகிறஇடம் வருகிறவரையில் நேராகப் போயிருக்கவேண்டும்.

மார்லோ:—நாற்சந்திகூடுகிற இடத்திற்குப் போகவேண்டுமா!

டோனி:—ஆமாம்; ஆனால், அந்த நான்கு தெருக்களில் ஒன்றின் வழியாகத்தான் போகவேண்டுமென்பதை மறந்துவிடாதீர்கள்.

மார்லோ:—ஓகோ! என்ன, விளையாடுகிறீர்களா!

டோனி:—அப்புறம், வலக்கை ஓரமாய்ப் பக்கவாட்டத்திலேயே, மண்டையுடை மைதானம் வரையில்போய், அங்கே, வண்டிச்சுவடுகளை நன்றாகத்தேடிப் பார்த்து, பிறகு, நேராக முன்னே சென்று, கொள்ளைநோய்ப்பண்ணையை அடையவேண்டும். கொள்ளைநோய்ப் பண்ணைக்கு வந்து சேர்ந்தபிறகு, முதலில் நீங்கள் வலப்பக்கம் திரும்பவேண்டும், அப்புறம் இடப்பக்கம் திரும்பவேண்டும், மறுபடியும் நேராக எதிர்ப்பக்கம் திரும்பிப் பழங்கிணறு காண்கிறவரையில்—

மார்லோ:—என்னஐயா இது! இதைவிடப் பாதாளலோகத்தைக் கண்டுபிடித்துவிடலாமே!

ஹேஸ்ட்:—என்ன செய்யலாம் மார்லோ?

மார்லோ:—எதாவது ஏற்பாடு செய்துதருவார்களானால் இவ்விரவு இந்த வீட்டிலேயே தங்கிவிடலாமென்று எண்ணுகிறேன்.

கடைக்காரன்:—ஐயோ, எஜமான்களே, இந்தவீடு முழுவதும் ஒரு படுக்கைதானே இருக்கிறது.

டோனி:—அதிலேயும் மூன்றுபேர் முன்னாலேயே படுத்துக்கொண்டுவிட்டார்கள். [சிறிதுநேரம் ஏதோ யோசிப்பவன்போல் சும்மாவிருந்து, பிறகு] ஒன்று செய்தாலோ...ஏனையா, இரண்டு மூன்று நாற்காலிகளைத் திருப்பிப்போட்டு அதன்மேல் நார்மெத்தையை விரித்துக்கொடுத்தாலென்ன?

ஹேஸ்ட்:—நாற்காலிகள் நாசமாய்ப் போகட்டும்.

மார்லோ:—உன்நார்மெத்தையும்நாசமாய்ப்போக!

டோனி:—நாசமாய்ப் போக வேண்டுமா?—அப்படியானால், இன்னும்கொஞ்சதூரம்போய்‘மான்தலை’ விடுதியில் தங்கலாமே. அங்கு நல்ல சாப்பாடு படுக்கை எல்லாம் குறைந்தசெலவிற் பெறலாம்.

ஹாஸ்ட்:— ஆஹா! ஆனால், இந்த இரவு ஆபத்திலிருந்து தப்பினோம்போல் தோன்றுகின்றது.

கடைக்காரன்:—(டோனிக்குஒருபுறமாய்) என்ன இது, உன் தகப்பன் வீட்டையே யோர் போஜனவிடுதி (Hotel) என்று சொல்லி இவர்களை அனுப்புகிறாயா?

டோனி:—சற்றே சும்மா இரு. இவர்களே அதைக் கண்டுபிடித்துக்கொள்ளட்டும் (அவர்களைப்பார்த்து) நேர்வழியே போவீர்களானால், பாதையோரத்தில் ஒரு பெரிய பழைய வீடு தென்படும். கதவின்மேல் பெரிய மான்கொம்பு வைத்திருப்பார்கள். அதுதான் அடையாளம். உள்ளே சென்று உங்களுக்கு வேண்டியதை அதட்டிக் கேளுங்கள்.

ஹேஸ்ட்:—ஐயா, உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்; போகலாமோ?

டோனி:—போங்கள். ஆனால், உங்களுக்கு ஒன்று சொல்லிவைக்கவேண்டும். அந்த விடுதிவைத்து நடத்துகிற அவர் பணக்காரர். இந்தச் சோற்றுக்கடை வியாபாரத்தை விட்டு விலகவேண்டு மென்றும் நினைத்திருக்கிறார். ஆகையால், தன்னைப் பெரியமனிஷன் என்று எல்லாரும் மதிக்கவேண்டுமென்ற ஆசை அவருக்கு அதிகம். ஹி! ஹி! ஹி ஹி ஹி! உங்களோடு சரிசமானமாய் உட்கார்ந்து பேசவருவார். இடங்கொடுப்பீர்களானால், தன் தாயார் நகரத்தலைவாகவும் அத்தை கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாகவும் இருந்தார்களென்று உங்களை நம்பும்படிசெய்யத் தலைப்படுவார்.

கடைக்காரன்:—‘நச்சுப்பிச்சு’ க்கிழம் அது நிச்சயம். ஆனாலும், சாப்பாடும் மற்ற சவுகரியங்களும் நன்றாக இருக்கும்.

மார்லோ:—அவ்வளவுதான் எங்களுக்கு வேண்டும். அதன்மேல் அவனோடு ஒருஉறவும் வேண்டியதில்லை. வலப்புறம் திரும்பவேண்டுமா நாங்கள்?

டோனி:—இல்லை இல்லை; நேராகப் போங்கள். நானே வந்து சிறிதுதூரம் வழிகாட்டுகின்றேன். [கடைக்காரனைப் பார்த்து] வாயைத்திறவாதே. [போகிறான்]

கடைக்காரன்:—அட குடிகேடா, என்ன குறும்படா உனக்கு. [போகிறான்]

முதலங்கம் முற்றிற்று.

தமிழ் வேதக் கடலமுதம்.

[234-வது பக்கத் தொடர்ச்சி]

சாஸ்திரங்களுக்கும் சாஸ்திர ஸாரமான திருமந்திரத்திற்கும் விஷயம்இன்னதென்பதைச் சொல்லுவோ மினி. எம்பெருமான் வியாஸர் முதலிய மாமுனிவர்களுக்கு அந்தர்யாமியா யிருந்து அவர்களைக் கொண்டு வெளியிட்ட சாஸ்திரத்திற்குச் சேதநருடைய தேஹ விசிஷ்ட வேஷத்திலே நோக்கு; ஸ்ரீ பதரிகாச்ரமத்திலே தானான தன்மையிலே நின்று வெளியிட்டருளின திருமந்திரத்திற்குச் சேதநருடைய வடிக்கட்டின வேஷத்திலே நோக்கு. இதனை விவரித்து உணர்த்தப்புகின், மஹரிஷிகள் வெளியிட்ட சாஸ்திரங்கள் எல்லாம் வர்ணாச்ரம தர்மங்களைப் பற்றியவை யாதலினால், வெறும் ஆத்மாவினிடத்தில் வர்ணாச்ரமங்கள் காணமுடியாமே தேஹத்தோடு கூடியநிலைமையிலேயே அவை காணக்கூடுமாதல் பற்றிச் சாஸ்திரங்களுக்குத் தேஹத்தளவிலே நோக்கு என்றும், திருமந்திரத்தில் கூறப்படும் விஷயம் தேஹத்தில் ஸம்பந்தப்படாமே ஆத்மஸ்வரூபத்தை மாத்திரம் பற்றியதாதலால் திருமந்திரத்திற்கு ஆத்மஸ்வரூபத்திலே நோக்கு என்றும் சொல்லிற்றாம்.

சாஸ்திரங்களுக்கு அதிகாரிகள் யார்? திருமந்திரத்

திற்குஅதிகாரிகள் யார்? எல்லாவற்றுக்கும்எல்லாரும் அதிகாரிகளாகத் தகுமோ என்னின்; ஆத்மஸ்வரூபத்தில் ஊற்றமில்லாமல் மேலெழுந்தவாரியாய்த்தேஹத்தளவிலே நோக்காய் நடக்கின்ற சாஸ்திரம் ஸர்வாதிகாரமன்று. அதில் அதிகரிப்பதற்கு நற்குலப்பிறப்பும் நல்லொழுக்க விளக்கமு மாகிற யோக்யதை வேண்டுமாதலால் சாஸ்திரம் அதிகாரிநியமத்தோடு கூடியிருக்கும். "கண்ணன் கழலிணை நண்ணும்மனமுடையீர்" என்றும் "ச்ரத்தைவ காரணம் பும்ஸாம் அஷ்டாக்ஷர பரிக்ரஹே" [திரு அஷ்டாக்ஷர மந்திரத்தைக் கைக்கொள்ளும்விஷயத்தில் மனிதருக்கு ஆஸ்தை யொன்றே காரணம்] என்றும் சொல்லுகிறபடியே ஆஸ்தை மாத்திரமே போதுமானதாய் ஸ்வரூபத்திலே ஊற்றமுடைத்தான திருமந்திரத்திற்கு "நானுஞ் சொன்னேன் நமரு முரைமின் நமோநாராயணமே" என்னும்படி அனைவரும் அதிகாரிகளாவர்.

சாஸ்திரத்தைப் பற்றினவர்கள் இருக்கும் விதம் இன்னதென்பதையும் திருமந்திரத்தைப் பற்றினவர்கள் இருக்கும் விதம் இன்னதென்பதையும் விளக்கிக்காட்டுவோமினி. ஸம்ஸார மண்டலத்தைக்கடந்து பகவானைப் பெறுவதற்கு உபாயமாக அப் பெருமானுடைய உபாஸநத்தை விதித்தும் 'அதற்குப் பலன் அளிப்பவன் பகவானே' என்று சொல்லியும் போகின்ற சாஸ்திரத்தில் ஊன்றுமவர்கள், ஆறு நீஞ்சுவார் தெப்பத்தை ஒருகையி லிடுக்கிக்கொண்டு தாங்களும் ஒருகை துழாவுமாப்போலே, தம் முயற்சியும் அதனாலாகும் எம்பெருமா னருளுமாகிற இரண்டையும்பற்றிக்கொண்டு ஸம்ஸாரமாகின்ற கடலைக் கடக்கநினைப்பார்கள். சாஸ்த்ரஸாரமான திருமந்திரத்தை உணர்ந்தவர்களோ வென்னில், "இவ் வாத்மவஸ்து தன் முயற்சியை உதறித் தள்ளிவிட்டு எம்பெருமானொருவனையே உபாயமாகப் பற்றியிருக்கத் தகுதியுடையது" என்று திருமந்திரஸித்தமான உறுதியை யுடையவர்களாதலால், ஓடமேறினவர்கள் அக்கரை சேர்வதற்கான தம்முயற்சியையும் தெப்பத்தையும் கைவிட்டுக் 'கரை குறுகுவது எப்போது' என்று பார்த்துக்கொண்டு அதன் விட்டத்திலே யிருக்குமாப்போலே, பிறவிக் கடலைத் தாண்டுவிக்கும் வைகுந்தனென்பதோர் தோணியைப் பற்றி அந்த வைகுந்தனது ஞானம் சக்தி முதலிய குணங்களைச் சிந்தனை செய்துகொண்டும் தங்கள் பாரதந்திரியம் முதலிய ஸ்வரூத்பதை அனுஸந்தானஞ் செய்துகொண்டும் தம் தலைச்சுமை யொன்றுமின்றியே யிருப்பாராதலால் தம் முயற்சியான உபாஸநாதிகளென்ன அவற்றாலாகும் பகவத்கிருபையென்ன ஆகிய இரண்டு கையையும் விட்டு 'வெறும் பகவத்கிருபையையே உத்தாரகம் என்று உறுதிகொண்டு 'கூவிக்கொள்ளுங் காலமின்னங் குறுகாதோ' என்று பகவத் பிராப்தியாகிற கரையைக் கிட்டலாங் காலத்தைச் சிந்தித்துக்கொண்டிருப்பார்கள்.

சாஸ்திரங்களில் ஊன்றினவர்களுக்குத் தம்முயற்சியில் ஊற்றமும், சாஸ்திரஸாரமான திருமந்திரத்தில் ஊன்றினவர்களுக்குத் தம் முயற்சியில் ருசி தவிர்ந்து மார்பிலே கைவைத்து உறங்கும்படியான நிலைமையும் நேர்வதற்குக் காரண மேதென்னவினவுங்கால்; அவரவர்களது ஸ்வரூப வுணர்ச்சியின் வேற்றுமையே காரண மென்ன வேணும். அதனை விளக்கிக் காட்டுவோம்; சாஸ்திரங்களில் ஊன்றினவர்கள் தமது ஆத்மஸ்வரூபத்தை எவ்விதமாக உணருகின்றார்கள், திருமந்திரத்தில் ஊன்றிஇருப்பவர்கள் தமது ஆத்மஸ்வரூபத்தை எவ்விதமாக உணருகின்றார்கள், என்பதைஆராயவேண்டும். ஆராயின், ஆத்மஸ்வரூபம் எப்போதும் ஞானத்தைக் குணமாகவுடைய தென்றும் அந்த ஞானத்தினால் எங்கும் வியாபித்து உடலினும் வேறுபட்டதாகிக் கர்த்தாவாய்ப் போக்தாவாய் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டதாயிருக்குமென்றும் ச்ரவண மனனங்களாலே சாஸ்த்ரஞ் ஞானிகள் உணருகின்றார்கள். ஆதலால் இவர்கள் தம் முயற்சியாலே பிறவிக் கடலை நீந்த நினைக்கின்றனர். திருமந்திரத்தில் ஊன்றினவர்களோ வென்னில், சாஸ்த்ரஞானிகள் உணர்ந்தபடிகளுக்குமேலே, பாகவதசேஷத்வ மளவான பகவத் சேஷத்தோடு கூடினதென்றும் அதற்கு எல்லையான பாரதந்திரியத்தையும் போக்யதையையும் வடிவாகவுடைய தென்றும் ஆத்மஸ்வரூபத்தை உணருகின்றார்களாதலால் தங்கள் பாரத்தை எம்பெருமான் மீது புகவிட்டுத் தம்முயற்சி யற்றவர்களா யிருக்கின்றார்கள். எவரும் தம் தமது உணர்ச்சியின் படியே தாம் நடந்துகொள்ளவல்லாதலால் இவர்களும் அங்ஙனமே நடந்துகொள்ளுங் கடப்பாடுடையார் என்றதாயிற்று.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து, 5-ம் தசகம்.

[233-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்

நோக்கும் பக்க மெல்லாங் கரும்பொடு
செந்நெ லோங்கு செந்தாமரை
வாய்க்குந் தண்பொரு நல்வ டகரை
வண்டுலை வில்லி மங்கலம்
நோக்கு மேலத் திசையல் லால்மறு
நோக்கிலள் வைகல் நாடொ றும்
வாய்க்கொள் வாச கமுமணி வண்ண
னுமே மேயிவ ளன்னைமீர்.

பொழிப்புரை:—அன்னைமார்களே! அதி குளிர்ச்சியான தாம்பிரபரணி ஆற்றின் வடகரையில் நோக்கும் பக்கமெல்லாம் காணுகிக்கிலும் தாமரஸ ஓடைகளும் கரும்புதண்டங்களும் பொன்போன்ற செந்நெல்லும் ஸமர்த்தியாய் வளர்ந்து செழித்தோங்கும் அத் திருத்துலைவில்லிமங்கலம் கண்டபிறகு அத்திசை யல்லது இப்பெண் வேறு இடத்தைக் கண்ணுறாள் - வைகல் - நாள்கள்தோறும் இந்தத் திவ்விய ஸ்தலமே அவள் புத்தியில் உலாவுவதால் இதையே நினைப்பாள். இந்த க்ஷேத்திரத்தின் எம்பெருமானின் திவ்விய குணங்களாகிய ஸௌலப்யத்தையும் காந்தியையும் வடிவழகையும் "மணிவண்ண" என்ற திருநாமத்தால் சொல்லிக்கொண்டே இருப்பாள். இவளின் மனது அவனின் வடிவழகிலேயே நுழையா நிற்கிறது-என்றார்.

குறிப்பு:—ஆகையால் இவளை உலகவழிக்குத் திருப்பி அமைப்பது அஸாத்திய மென்று கருத்து. மணிவண்ண-மணி-கைகளுக்கு அடங்கித் துணிச்சேரையில் முடிந்துவைத்து ஆநந்திக்கக்கூடிய விலையில்லா மாணிக்கம்; வண்ணன் - காந்தியுக்தன் - எல்லாநற்குணங்களும் அமைந்த பரிபூர்ணன்.

7-ம் பாசுரம்.

அன்னை மீரணி மாம யிற்சிறு
மானிவள் நம்மைக் கைவலிந்
தென்ன வார்த்தை யுங்கேட் குறுதுலை
வில்லி மங்கல மென்றல்லால்
முன்னம் நோற்ற விதிகொ லோமுகில்
வண்ணன் மாயங் கொலோவவன்
சின்ன முந்திரு நாம முமிவள்
வாய னகடி ருந்தவே.

உரை:-அன்னைமாரே, வெகு அழகான சிறகுகளை விரித்தாடும் மயில்போன்றவளும் இளமையானமான் போன்ற நோக்கு உள்ளவளும் ஆன இச் சிறுபெண் - (கைவலிந்து)நம்முடைய வார்த்தைக்கு அடங்காமல் மிஞ்சிவிட்டாள். வேறு என்ன வார்த்தைகளையும் கேட்கிறாளில்லை. துலைவில்லிமங்கல மென்ற ஒரு சொல்லே இவள் பேசுவது. இப்படிக்கு வருகைக்குக் காரணம் (முன்னம்) முன்ஜந்மங்களில் செய்த தவங்களுக்குப் பயனாக விதியால்வந்து வாய்த்த புண்ணியமோ? அல்லாக்கால்மேகம்போன்றகிருஷ்ணபகவானின் திவ்விய ஸௌந்தரியத்தால் வந்த (மயக்கோ) ஆச்சரியமான சக்தியோ? இந்த க்ஷேத்திரத்தி னெம்பெருமானின் குறி யடையாளங்களையும் திருநாமத்தையுமே வெகு ரஸமாய்க் கேட்பவர் மனம் உருகும்படி கற்கின்றாள், - இப்படிக் கற்கின்றவை (வாயனகள்) எம்பெருமானைப்பற்றிய வாசகங்கள் வெகு சீர்திருத்தமாய்இவள் வாயால் உச்சரிக்கப்படுகின்றன.

8-ம் பாசுரம்

திருந்து வேத மும்வேள் வியுந்திரு
மாம களிருந் தாமலிந்
திருந்து வாழ்பொரு நல்வட கரைவண்
டுலை வில்லி மங்கலங்
கருந்த டங்கண் ணிகைதொ ழுதவந்
நாள்து டங்கி யிந்நாடொறு
மிருந்தி ருந்தர விந்த லோசன
வென்றென் றேநைந் திரங்குமே.

திருத்துலைவில்லி மங்கலத்தில் மூன்று விசேஷ ஸம்பவங்கள் பொலிந்திருக்கின்றன; அவை மலிந்து மிக மிகப் பிரகாசமாய் விளங்குகின்றன என்கிறார்:—(1) திருந்து வேதம் - ஸ்வரத்தாலும் சந்தஸாலும் மாறுபாடு அடையாமல் கட்டுப்பட்ட வேதங்கள் - (2)வேள்வி = பக்தர்கள் அனுஷ்டிக்கும் யாகங்கள்(3) - திருமாமகளிரும்தாம் = ("தாம்" என்பதோடு "உம்" தொக்கு நிற்கிறது;) இலக்குமியும் தாமும் (பகவானும்) வைகுண்டத்தி லிருப்பதுபோல் வில்லிமங்கலத்தில் பொலிந்துவிளங்குகிறார்கள். கரும்தடங்கண்ணி - (1) நீலோத்பலம்போல் வர்ணமும் (2) தடாகம்போல் விளங்கும் பெரும் கண்களும் உடையவள். கண்ணால் கண்டதினம் முதல் என்பது "கைதொழுதவந்நாள்" என்கிறதில் அந்தர்க்கதம்—மங்கலம் கண்டது முதல் அக்ஷேத்திரத்தின் பகவானை இலக்ஷித்துக் கூறியபடி. "அரவிந்தலோசனனே" என்று "நைந்து" மனமுருகி நன்றாகச் சொல்ல வல்லமையின்றித் திருக்கண்களை நினைந்து மனந்தளரும்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—3. நட்புப் படலம்

[231-வது பக்கத் தொடர்ச்சி]

நட்பின் மெய்ப்பயன் நல்க நேர்வதே.

செய்வதற்கரிய வேள்விசெய்து தயரதன் நால்வரே புதல்வர் பெற்றான். பெற்றவன் மாண்ட பின்னர், இராமன்றன் உதவியாலே மீண்டுமோர் மைந்தர் மூவர் பெறுவதோர் பேறும்பெற்றான். அம்மூவர் தம்முள் கோள்நெறி கற்றிலாக் குகனெனப் பெயரிய வேட்டுவக்குல வள்ளல் இராமனுக்குத் தம்பியாய் நேர்ந்தவாறு இங்கு நினைத்தற்குரியது. முன் எயினர் குலத்தில் ஒருதம்பி எய்திய இராமன், இன்று குரக்கினத்துள் ஒருதம்பி கொள்ளலாகின்றான்; இனி அரக்கர்மரபிலே ஒருதம்பி வரிப்பவும் வரிப்பான். தத்தம் உடன்பிறந்தோர் உயிரைவிற்று இராமனைத் தமக்குத் தமையனாக வாங்கியபழி பின்னையஇருவரையும் புணருமோ யாதோஎன்னும் ஐயம்பற்றி இவ்வயின் அலச வேண்டா. தமையனது தீமையையும் தமதாகவேஎல்லாத் தம்பியர்களும் தாங்கிய நிலையினராய் நின்றுவிடுவாராயின் பின் கும்பகருணன் பெரிது உத்தமனாதலுண்டோ? தம் முன்பிறந்தோர் இரத்தத்தினின்று இராமனது நட்பைக் கடைந்தெடுத்துக்கொண்ட சுக்கிரீவனது செயலும் வீடணன் செய்தியும் எவ்வாறாயினும், குறியெதிர்ப்பொன்றும் இல்லா நீர்மையுடையது அக்குகனெனும்பெருந்தகை ஏந்தியநட்பேயாம்.

அன்னதோர் நட்பின் அருமையை உணர்ந்ததாற்றான் இராமபிரான் அச்சிருங்கிபேரச் செல்வனை "யாதினும் இனிய நண்ப" என்றழைத்ததோடமையாமல், "நான் உன் தொழிலுரிமையில் உள்ளேன்" என்னவும் நேர்ந்தனன். வேட்டுவக்குரிசிலும் அன்னதை உணர்ந்து, "தோழமை என்றவர் சொல்லியசொல் லொரு சொல்லன்றோ" என உள்ளம் நெகிழ்ந்து உருகினன்.

கங்கைக் கரையில் பெற்ற வோர் வேட்டுவத் தம்பியினருமைத் தன்மை அன்னதாக, இங்கு இருசியமுக பருப்பதத்தில் இராமனுக்கு வாய்க்கின்ற வானரத் தம்பியை வான்மீகமுனிவர் பின்வருமாறு உறவுசெய்து வைக்கின்றார்:—

"அனுமான் இவ்வாறு சொல்லக்கேட்ட வானராதிப்னாகிய சுக்கிரீவன் மனத்திற் சந்தோஷங்கொண்டு, இராமரிடத்தில் தான் முன் கொண்டிருந்த பயத்தைத் தவிர்த்து, மனோவியாகுலத்தைப் போக்கி, அழகிய மானிட உருவம் தரித்து, வெகு பிரீதியுடன் இராகவரை நோக்கி, "ஐயா, நீர் தருமவழியில் நின்று எல்லாரிடத்திலும் அன்புபாராட்டும் தன்மையர் என்று உம்முடைய குணங்களனைத்தையும் யதார்த்தமாக மாருதி சொல்லக்கேட்டேன். பிரபுவே, வானரனான என்னோடு நீர் நட்புக்கொள்ள விரும்புவது எனக்கு மிக்க மேன்மையும் பெரிய லாபமும் ஆகின்றது. என்னுடைய சிநேகம் உமக்கு வேண்டுமானால் இதோ

யான் நீட்டிய கையை உம்முடைய கையால் பற்றிச்செய்ய வேண்டிய உறுதியைச் செய்துகொள்ளும்" என்றான். இவ்வண்ணம் சுக்கிரீவன் சொன்ன இனிமையான வார்த்தையை இராமர் கேட்டுக் களிப்புற்றுத் தமது கையால் வெகு சந்தோஷத்துடன் சுக்கிரீவன் கையைப் பற்றினார். சுக்கிரீவன் மனப்பூர்வமாய்த் தன்னுடைய நட்பை நாடி நின்றதால் அவனை இராமர் அதிக சந்தோஷத்துடன் இறுகத் தழுவிக்கொண்டார். அப்போது சத்துரு சூதனனாகிய அனுமான் தான் கொண்டிருந்த பிரமசரிய உருவத்தை விட்டுத் தன்னுடைய சுய ரூபங்கொண்டு, அரணியில் நெருப்புக் கடைந்தெடுத்து, கொழுந்துவிட்டெரியும் அத்தீயை ஆசாரத்துடன் புஷ்பங்களால் அருச்சித்து வெகு பக்தியோடு அவ்விருவர்களுக்கும் நடுவில் வைத்தனன். இராமரும் சுக்கிரீவனும் அத்தீயை வலம்வந்து, சிநேக வுறுதி செய்துகொண்டு,உள்ளங்குளிர்ந்து நின்று, விரைவில் திருப்தி யடையாது ஒருவரை யொருவர் பார்த்தவண்ணமா யிருந்தார்கள். அப்பொழுது சுக்கிரீவன் இராமரைப் பார்த்து "ஐயா, நீர் என் மனத்துக் கிசைந்த நண்பர், சுகமும் துக்கமும் இனி நமக்குப் பொதுவாயின" என்று கூறி இலைகளடர்ந்து நன்றாகப் பூத்திருந்த ஓர் ஆச்சாமரத்தின் கிளையொன்றை யொடித்துக் கீழே போட்டு இராமருடன்உட்கார்ந்தான். அந்தவேளையில் அனுமானும் சந்தோஷமடைந்து லக்ஷ்மணர் உட்காருவதற்கு நன்றாகப் பூத்திருந்த ஒரு சந்தனமரத்தின் கிளையை முறித்துக் கீழேபோட்டான். பின்பு சுக்கிரீவன் சந்தோஷத்தால் தன்னிரு கண்களும் மலர்ந்து தோன்ற இராமரைப்பார்த்து மதுரமான வார்த்தைகளால் "ஓ ரகுநந்தன, நானிந்தக் காட்டில் என்தேசத்தையும் மனைவியையு மிழந்து, மிக்க பயமடைந்து, எனது சத்துருக்களுக்கு அணுகமுடியாத இம்மலையை யடைந்து பிழைத்திருக்கிறேன். என் தமையனை வாலியினால் பகைக்கப்பட்டுஅவனுடைய பயத்தால் மதிகலங்கி இங்கு வசித்துக்கொண்டிருக்கின்றேன். இவ்வாறு வாலியை நினைந்து பயம்கொண்டு திரியும் என்னை நீர் அபயப்பிரதானம் செய்து காத்தருளவேண்டும். நான் இனி அஞ்சாதவண்ணம் செய்வது உமது கடமை" என்றனன். அறத்தைஉணர்ந்தவரும்அதன் வழியினின்றும் பிறழாதவருமான இராமர் இவ்வண்ணம் சுக்கிரீவன் சொன்னதைக் கேட்டுப் புன்முறுவல் கொண்டு, அவனை நோக்கி "கவிசிரேஷ்டனே, நட்பினது பயன் உபகார மியற்றுதல் என்பதைநான் அறிவேனாகையால் உம்முடையமனைவியை யபகரித்த வாலியை வதைக்கின்றேன். ஒரு நாளும் வீண் போகாதனவும் கூர்மையான முனைகள் பொருந்தினவும் கங்கபத்திரங்கள் கட்டப்பட்டு நேராய்ச் செல்கின்றனவும் சூரியனுக்கொப்பர்யினவுமான என்னுடைய பாணங்கள் இந்திரனுடைய வச்சிராதயுதம்போலக் கொடியோனாகிய வாலியின்மேல் அதிவேகமாய்ப் பாயப்போகின்றன. விஷத்தைக் கக்குகின்ற சர்ப்பங்கள் போன்ற குரூரமான என்னுடைய பாணங்களால் பிளவுண்டு, சிதறிவிழுந்த மலையைப்போல வாலி இன்று பூமியில் மடிந்து விழுவதைப் பாரும்" என்று மறுமொழி பகர்ந்தனர். தன் மனத்துக் கிசைந்த மொழிகளை இராமர் சொல்லச் சுக்கிரீவன் கேட்டுமிக்க சந்தோஷமடைந்து, "மானிட சிங்கமாகிய இராகவ, உமது பேரருளினால் நான் என் பிராணநாயகியையும் இராச்சியத்தையும் அடைவேன் சந்தேகமில்லை. உத்தமனே, எனக்குச் சத்துருவாகிய என் தமையனை எப்படி வதைக்கவேண்டுமோ அவ்வாறு செய்யவேண்டும்" என்று சொன்னான். இவ்விதமாய் இராமசுக்கிரீவர்களிருவர்க்கும் நட்பு உண்டானபொழுது, தாமரை மலரையும், பொன்னையும் அக்கினியையும் போன்ற கண்களை முறையேயுடைய சீதைக்கும்,வாலிக்கும், அரக்கர்களுக்கும் இடது கண் துடித்தது."

அனுமனே சடங்கு காட்ட இராமனும் சுக்கிரீவனும் நட்புப் புணர்ந்ததன்மை இன்னதேயாம். இந் நிகழ்ச்சி நடக்கின்ற நீர்மையைக் கருதுங்கால், உயர்நிலையில் இருப்பான் ஒருவன், தன் காரியம் ஆதல் வேண்டி,தன்னிற் சிறிது தாழ்ந்தவனை ஏற்றுக்கொள்ளும் தகைமை சுக்கிரீவனது சொற்களில் அமைந்திருக்கின்றதோவென்று ஐயுறவேண்டி வருகின்றது. "என்னுடைய சிநேகம் உமக்குவேண்டுமாகில் யான் நீட்டிய கையைப் பற்றிக்கொள்ளும்" என்னும் இக்குரல், "ஒரு பெண்ணின் பொருட்டு இராமன் உன்னைத்தஞ்சமடைகின்றான்" என்று முன்னே அனுமன் சொல்லிவைத்திருப்பதற் கேற்றவாறே செம்மாந்து ஒலிக்கின்றது என்னலாம். "ஐயா, நீர் என் மனத்துக் கிசைந்த நண்பர்; சுகமுந் துக்கமும் இனி நமக்குப் பொதுவாயின" என்னும்சொற்களும் வந்தடைந்தோனொருவனைத் தஞ்சமேற்றுக்கொள்ளுந்தன்மையவே. அளிப்பதுதஞ்சமானாலும், அடைந்தவர் இடும்பையைத்தீர்ப்பதுபோகி, "இனி நான் அஞ்சாதவண்ணம் செய்வது உமது கடமை" என்ன இராமனைத்தன் ஏவலில் அமைத்துக்கொள்கின்றான். இது கேட்ட இராமன் புன்முறுவல் பூண்டான் என்பர் வான்மீகமுனிவர். அவர் கருத்துச் சென்றே செல்லாமலோ, அப் புன்முறுவலுள் நாடக சித்திரமொன்று நனி யமைந்திருக்கின்ற தென்பதில் ஐயமில்லை. இடுக்கண் களைவதே நட்பன்றி, இடுக்கண்ணைக் களைந்துகொள்வதன்று நட்பு என்பதை அவனுக்கு நினைவுறுத்துவான் போல், "ஏ,குரங்கே, நட்பின்பயன் உபகாரம்இயற்றுதல் என நான் அறிவேன்" என்ன எடுத்துச் சொல்லுகின்றான் இராமன். இதன் பின்னேனும் சுக்கிரீவன் அக்குறிப்பினையுணர்ந்து "நானும் உன்மனைவியைத் தேடித்தருவதற்கு உதவி செய்வேன்" என்று உறுதி கூறினானோ வெனின் அதுவுமில்லை. மீண்டும், "இராகவ, நான் என் பிராண நாயகியையும் இராச்சியத்தையும் அடைவேன். எனக்குச் சத்துருவாகிய என் தமையனை எப்படி வதைக்க வேண்டுமோ அவ்வாறு செய்யவேண்டும்" என்றே வற்புறுத்துகின்றனன். சுக்கிரீவன் மனைவியை இழந்ததற்கு யாவரும் பரிவார், உண்மையே. மற்று அவன் எந்த இராச்சியத்தை இழந்திருந்தனன் என்பதுதான் தெரிந்ததில்லை. இவன் இழந்திருந்த மனைவி பின் சேருங்கால் புக்ககத்துச் சீர்தனமாய்க் கொணர்கின்ற அரசன்றோ அக்கிட்கிந்தையரசு. மனைவியைப் பிரிந்ததால் பெறுகின்ற பேறு இது. இராமன் சிலகாலம் தன் இல்லாளை இழந்துநின்றான் என்றால் அதனால் வீடணனுக்கு இலங்கைப் பேரரசு வாய்த்ததோர் வரலாற்றினை இதுவும் ஒக்கும்.

வான்மீகர்தம் வழிமுறை யவ்வாறாக, அதனின்று பிறந்த கம்பரது காவியத்தினுள் இச்செய்தி கிடந்த பரிசு இனிக் கருதுவாம். இராமனுக்குத்தான் உதவி புரிவதாகச் சுக்கிரீவன் யாதும் சொல்லாமல் விட்டதைக் கம்பரும் ஏற்றுக்கொண்டார். ஏற்றுக்கொண்டு அவ்விடுகை அமைதியாம்படி சுக்கிரீவன்சிந்தனை இங்குச் சிறிது மாறி நிகழலாகின்றது.

ஆயதோ ரவதி யின்க ணருக்கன்சே யரசை நோக்கித்
தீவினை தீய நோற்றா ரென்னின்யார் செல்வ நின்னை
நாயக முலகுக் கெல்லா மென்னலா நலமிக் கோயை
மேயினன் விதியேநல்கின் மேவலா காதென் னென்றான்

[அவ்விருவரும் சந்தித்தபோது, சூரியன் புதல்வனாகிய சுக்கிரீவன் இராமபிரானைப்பார்த்து, "செல்வனே, உலகங்களிலெல்லாம் சிறந்தவன் என்று சொல்வதற் கேற்ற நன்மை மிகுந்த உன்னை அடைந்தேன். ஆதலால், என்னைப் போல், தீவினை தீரும்படி தவஞ்செய்தவர் யார் உளர்? விதியே கொணர்ந்துகொடுத்தால் எதுதான் கைகூடாது என்றான்.]

இராமனைக் காண்பதன்முன் இவ் வரிக்குலத் தலைவன் தன்னைப் பற்றி யாது கருதியிருப்பினும், கண்ட பின்னர்,கூட்டொருவரையும்வேண்டாக்கொற்றவன் அவன் என்பதை அறிந்தனனாகி,தன்னை முழுவதும் அவன்முன் அழித்துக்கொண்டு, தன்னுடைய பாக்கியத்தையே எண்ணி யெண்ணி மிக உவப்பதாயினான். இருப்பினும் இராமன், அவனைச் சிறிது சோதிக்க நினைத்தனன்போல் தன்னுடைய கருமங் கருதியேசுக்கிரீவனை நாடி வந்தானெனத் தெரிவிப்பவனாகி,

மையறு தவத்தின் வந்த சவரியிம் மலையி னீவந்
தெய்தினை யிருந்த தன்மை யியம்பினள் யாங்க ளுற்ற
கையறு துயர நின்னாற் கடப்பது கருதி வந்தே
மையநிற்றீருமென்ன வரிக்குலத்தரசன்சொல்வான்.

[ஐய, குற்றமற்ற தவத்தோடு வந்த சபரி என்பவள், இந்த ருசியமூக மலையில் நீ வந்து சேர்ந்திருக்கின்ற செய்தியைச் சொன்னாள். நாங்கள் அடைந்திருக்கின்றதும் செயலற்று நிற்பதுமாகிய இந்தத் துயரத்திலிருந்து உன்னுடையஉதவிகொண்டு கடக்கக்கருதி இங்கு வந்தோம். அது உன்னால் தீரும், என்று சொல்ல, குரங்குகளுக்குத் தலைவனான சுக்கிரீவன் சொல்பவனானான்]

தன்னால் இவர்தம் துயரம் தீர்வதென்பதெல்லாம் உபசார வார்த்தையே என்னும் எண்ணமே நிலைத்த சுக்கிரீவனோ,

முரணுடைத் தடக்கை யோச்சி
முன்னவன் பின்வந் தேனை
இருணிலைப் புறத்தின் காறு
முலகெங்குந் தொடர வுந்துன்
றரணுடைத் தாகி யுய்ந்தே
னருயிர் துறக்க லாற்றேன்
சரணுனைப் புகுந்தே னென்னைத்
தாங்குத றரும மென்றான்

[என் தமையனாகிய வாலி, தம்பியாகியஎன்னைத் தன் வலிமையுடைய பெரிய கையை ஓங்கி, இவ்வுலகின் புறத்தில் இருள் சென்று தங்கும் இடத்திற்கு அப்புறமும் எல்லாவுலகங்களிலும் என்னைத் துரத்த, இக்குன்றைஅரணாகக் கொண்டு பிழைத்தேன். என் அரியஉயிரை விடமாட்டாமல் சுமந்துகொண்டிருக்கின்றேன். இப்பொழுதுஉன்னை அடைக்கலமாக அடைகின்றேன். என்னைக் காப்பாற்றுதல் உனக்குத் தருமமாம் என்றான்.]

ஆதலின்,தஞ்சம்புக வருவோனைத்தடுத்துத் தானே தஞ்சமடைகின்ற தன்மையிற்றானே தலைநிற்கின்றான் சுக்கிரீவன். அன்னது கண்டு,

என்றவக் குரக்கு வேந்தை யிராமனு மிரங்கி நோக்கி
உன்றனக் குரிய வின்ப துன்பங்க ளுள்ள முன்னாள்
சென்றன போக மேல்வந் துறவன தீர்ப்ப லன்ன
நின்றன வெனக்கு நிற்கு நேரென மொழியு நேரா

[இராமன், அவ்வாறுகூறிய குரங்குக்ளுக்குத் தலைவனை சுக்கிரீவனை மனமிரங்கிப் பார்த்து, உனக்குரிய சுகதுக்கங்கள் இதற்குமுன் கடந்தனபோக, இனி உனக்கு வந்து நேரவல்ல துன்பங்களையெல்லாந் தீர்ப்பேன்.இனி வருவதற்குஇருக்கின்ற சுகதுக்கங்கள் எனக்கும்உனக்கும் சமமாகும், என்று வாக்குக் கொடுத்து—]

மற்றினி யுரைப்ப தென்னே
வானிடை மண்ணி லுன்னைச்
செற்றவ ரென்னைச் செற்றார்
தீயரே யெனினு முன்னோ
டுற்றவ ரெனக்கு முற்றா
ருன்கிளை யெனதென் காதற்
சுற்றமுன் சுற்ற நீயென்
னின்னுயிர்த் துணைவ னென்றான்

[இன்னும் நான் பலபலசொல்வதற்கு என்னஉளது. விண்ணுலகத்திலேனும் பூவுலகத்திலேனும் உனக்குப்பகைவராயிருப்பவர் எனக்கும் பகைவராவார். தீயவர்களேயானாலும் உன்னைச் சேர்ந்தவர் என்னைச் சேர்ந்தவர்களும்ஆவார். உன் கிளைஞர் எனக்கும் கிளைஞராவார். எனது அன்புள்ள சுற்றத்தார்கள் எல்லாரும் உனக்கும் சுற்றத்தவர்ஆவார். நீ என் இனிய பிராண சிநேகிதன்ஆவாய்—என்றான்.]

நட்புபுக்கு நல்குகின்ற நன்மை யெல்லாம் பெட்புகொண்டு புகன்று நின்ற தன்மை இன்னதே. சுக்கிரீவனுக்கு இராமன் அபயம் அளித்ததுமாத்திரமன்றி அன்பையும் மனமுவந்து அளிக்கின்றான். முன்னர்க் கங்கைக் கரையில்,

என்னுயி ரனையாய்நீ யிளவலுன் னிளையானிந்
நன்னுத லவணின்கே ணளிர்கட னிலமெல்லா
முன்னுடையது நானுன் தொழிலுரிமையினுள்ளேன்

என்னக் கிராதர் வேந்தனுக் குரைத்த பெருந்தகைச் சொற்கள் இவ்விடத்துச்சாலச்சிந்தித்தற்குரியன. இவ்விடத்துப்போன்றே அங்கும்என்கிளை இது கா வென்னேவலில் இனிது என்று குகனது கிளைஞரைத் தன் கிளைகளும் இராமன் ஆக்கிக்கொண்டனன். சுக்கிரீவன் தன் இன்பதுன்பங்களை இராமனுடன் பகிர்ந்துகொண்டான் என வான்மீகிமுனிவர் இயம்பிய தன்மையை மாற்றி இராமன் அவனுடைய துன்பத்தை ஏற்றுக்கொண்டானெனக் கம்பர் கூறியது பொருத்தம் மிக வுடைத்தாதல் புலப்படும்.

திருக்குறள் மூலமும் சொற்குறிப் பகராதியும்.

வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்குமாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமாயிருக்கும். ஒப்புக்குறள்களையும் தொகுத்துப் பதிப்பாசிரியர் அளித்திருப்பது மிகவும் பயனுடையதாம். பயிலப்பயில இப்பதிப்பின் பெருமையும் அருமையுந் தெரியவரும். விலை—அணா 12. தபால் செலவு வேறு.

கலாநிலயம், புரசை, [illegible]

m211, N24K0
N34.2.16.
199166

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

III. ஸ்ரீரங்கநாத ஸ்வாமி ஸ்தோத்திரங்கள்.

[239-வது பக்கத் தொடர்ச்சி]

5. ராகம்—ஆரபி] [தாளம்—ரூபகம்.

பல்லவி

ஜூதாமு ராரே ஸூததுலார ரங்கபதிநி..............................(ஜூ)

அநுபல்லவி

ஸீதாபதி பூஜ்யுடட, ஸ்ருங்கார சேகருடட..........................(ஜூ)

சரணம்

1. ஸரிகம்த்ஸூ சாலுவட—த்ஸௌகட்ல போகுலட
பருவம்பு ப்ராயமட—பரமாத்முடட—ரங்கனி..................................(ஜூ)
2. முகநிர்ஜித சந்த்ருடட—முத்துமாட லாடு நட
ஸூகமொஸங்கி ப்ரோசுநட—ஸூந்தராங்குடட—ரங்கனி.......................(ஜூ)
3. ஆகம ஸஞ்சாருடட—அகில ஜகத்பாலுடட
த்யாக ராஜஸந்நுதுடட—தருணுலார ரங்கபதினி...............................(ஜூ)

பொருள்

ஸூதது லாரா—தோழிப் பெண்களே! ரங்கபதினி ஜூதாமு ராரே—ஸ்ரீரங்கநாதனைத் தரிசிப்போம், வாருங்கள்.

ஸீதாபதி பூஜ்யுடுஅட—அவன் ஸ்ரீராமபிரானால் பூஜிக்கப்பட்டவனும்;ச்ருங்கார சேகருடு அட—ஸ்ருங்காரரசத்தின் சிகரமாய் விளங்குபவனும்;

(அவன் அணிந்துள்ளது), ஸரிகந்த்ஸூ சாலுவஅட—ஸரிகை வேலைப்பாடுடைய கரைகளையுடைய சால்வைகளாம்; த்ஸௌகட்ல போகுலுஅட - நான்கு முத்துக்கள் இட்டுக் கட்டிய கடுக்கன்களாம்; பருவம்பு ப்ராயமுஅட - (அவன்) நல்ல யௌவன தசையுள்ளவனும்; பரமாத்முடு அட - பரமாத்துமாவாம்; ரங்கனி - (அப்படிப்பட்ட) ஸ்ரீரங்கநாதனை, (ஜூதாமுராரே - ஸேவிப்போம் வாருங்கள்.)

முகநிர்ஜித சந்த்ருடுஅட - (அவன்) சந்திரனை வென்ற அழகுடைய முகத்தையுடையவனும்; முத்து மாடலஆடுநு அட - அழகான ஸம்பாஷணையை யுடையவனும்; ஸூக முனு ஒஸங்கி - ஆநந்தத்தை யளித்து, ப்ரோசுனு அட- காப்பாற்றுகிறவனும்; ஸூந்தராங்குடு அட - லாவண்யமான தேஹம் பொருந்தியவனும்; (அப்படிப்பட்ட), ரங்கனி - ஸ்ரீரங்கநாதனை, (ஜூதாமுராரே - சேவிப்போம் வாருங்கள்.)

ஆகம ஸஞ்சாருடு அட - (அவன்), ஆகமங்களில் சஞ்சரிப்பவனும்; அகில ஜகத் பாலுடுஅட - எல்லா உலகங்களையும் காப்பாற்றுபவனும்; த்யாகராஜ ஸந்நுதுடு அட - தியாகராஜனால் கொண்டாடப்பட்டவனும்; தருணுலார - யௌவனப் பிராயம் வாய்ந்த நாரீமணிகளே! ரங்கபதினி-ஸ்ரீரங்கநாதனை, (ஜூதாமுராரே - தரிசிப்போம் வாருங்கள்.)

குறிப்பு.

இந்தக் கீர்த்தனமும் ச்ருங்காரரஸம் பொருந்திய தொன்றும். இந்தக் கீர்த்தனத்தைப் பாடும்போது ஸ்ரீரங்கநாதனுடைய திருநாமங்களுள்,வைபோக ரங்கன், பரிமள ரங்கன், கஸ்தூரிரங்கன், அழகியமணவாளன் முதலியவை நம் ஞாபகத்துக்கு வரும்.

ஆரபி ராகலக்ஷணம்

இது கனராகங்களிலொன்று. மங்களகரமானதென்று பெரியோர்களால் கருதப்படும் ஒரு சிரேஷ்டமான ராகம். இது, தற்காலம் வழங்கும் 72 மேளகர்த்தா முறையின்படி 29 வது மேளகர்த்தாவான தீர சங்கராபரணத்தில் ஜன்யம். ஔடவ ஸம்பூர்ணம்.ஆரோஹணத்தில் காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம். இந்த இராகம் பெரும்பாலும் தேவகாந்தாரியைப்போல் இருப்பதனால் இதை மிகவும் எச்சரிக்கையுடன் பாடவேண்டும். தேவகாந்தாரியிலுள்ள விசேஷப் பிரயோகங்களான'தநிஸ்ா' நீஸரீ மபதா நிஸ்ரீ, என்பது போன்ற பிரயோகங்கள் இதில் பிரயோகிக்கப் படக்கூடாது. மற்று இவ்விராகத்தின் நுண்ணிய அம்சங்களைக் கீதகீர்த்தனாதிகளிலுள்ள விசேஷப் பிரயோகங்களால் அறியவேண்டும்.

ஸ்வர ஸாஹித்யம்

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.

; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.

| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.

|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.

* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.

ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.

பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு:—இக்கீர்த்தனம் மத்யம காலத்திற் பாடப்படவேண்டும்]

பல்லவி

பா ;	; பா;பா	மா,க	ரீ;ஸாஸா	ரீஸா	தா ஸா;ஸா	ரீ ரீ	மா—பாபாபா
ஜூ;	; தா;மு	ரா ,.	.; . ரே	ஸூத	து லா;ர	ரங் .	க — ப தினி
தாதா	தாதாதாபா	மா,க	ரீ;ஸாஸா	ஸரிஸா	தாஸா;ரீரீ	மகரீ	மா—பாபாபா
ஜூ .	. தா . மு	ரா , .	.; . ரே	ஸூ. த	து லா; . ர	ரங் . .	க —ப தி னி
தாரீ	ஸ்ா - தாதாபா	ம பதப	மா,கரீஸா	ஸரிஸா	தாஸா;ரீரீ	ம கரீ	மா—பாபாபா
ஜூ.	. - தா . மு	ரா . . .	. , . . ரே	ஸூ. த	து லா; . ர	ரங். .	க — ப தி னி
த ஸ்ரிஸ்	ஸ்ா - தாதாபா	ம பதப	மா,கரீஸா	தா தா	தாஸ்ா;ஸ்ா	ஸ்நிதா	பா—பாபாபா
ஜூ . . .	. - தா . மு	ரா . . .	. , . . ரே	ஸூத	து லா; ர	ரங். . .	க — ப தி னி
த ஸ்ரிஸ்	ஸ் நிதாதாபா	ம பதப	மா,கரீஸா	தா ரீ	ஸ்ா-ஸ் நிதாதா	ஸ் நிதா	பா - ; மகரிஸ
ஜூ . . .	தா . . . மு	ரா . . .	. , . . ரே	ஸூத	து -லா . . ர	ரங் . .	க - ; ப.தி .
ரிம*தா	தா; தாபா	ம பதப	மா,கரீரீ	ஸா ;	; ; — ; ;	; ;	; ; — ; ;
ணி. *ஜூ	தா; . மு	ரா . . .	. , . . ரே	. ;	; ; — ; ;	; ;	; ; — ; ;

அநுபல்லவி

; * நித	பா; பாபா	தாதா	ஸ்ாஸ்ாஸ்ா;	,-நி த	பா;பாபா	பதஸ்ா	ஸ்ாஸ்ாஸ்ா;
; * ஸீ .	தா, பதி	பூ .	ஜ்யுடட;	;- ஸீ.	தா; பதி	பூ . .	ஜ்யுடட;
; * நித	பா; பாபா	பதஸ்ா	ஸ்ாஸ்ாஸ்ா-நித	பம-தா	தா;தாதா	பதஸ்ா	ஸ்ாஸ்ாஸ்ா-தஸ்
; * ஸீ .	தா; பதி	பூ . .	ஜ்யுடட - . .	. . -ஸீ	தா; பதி	பூ . .	ஜ்யுடட - . .
ரீ * ஸ்நி	தா;தாபா	பதஸ்ா	ஸ்ா—தஸ்ரீரீ	ரீ ம் க்	ரீ;ஸ்ாஸ்ா	ஸ்நிதா	பாபா-மகரிஸ
. * ஸீ.	தா; பதி	பூ . . ஜ்	யு —ட . . ட	ச்ரு . ங்	கா; . ர	சே . .	கரு -ட . ட .

ரிம *
. . * (ஜூதாமுராரே)

சரணம்

; * பா	பாபாபா;	மாகா	ரீஸாரீ;	ஸாரீ	ஸாநீதா;	ஸாரீ	ரீரீரீ;
; * ஆ	கமஸஞ்;	சா .	ருடட;	அகி	லஜகத்;	பா .	லுடட;
; * பா	பாபாபா;	மபதப	மகரீரீ ;	ஸரிஸநி	தாதாத;	ஸாரீ	ரீரீரீ;
; * ஆ	கமஸஞ்;	சா . . .	ரு . டட;	. அ . கி	லஜகத்;	பா .	லுடட;

"த்யாகராஜ ஸந்நுதுடட......ரங்கபதினி"—அனுபல்லவிபோல் பாடப்படவேண்டும்
இதர சரணங்களும் இச்சரணத்தைப்போலவே பாடவேண்டும்.

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

வர கவி இரவீந்திரநாதர் எழுதியுள்ள கட்டுரைகளில் மிகப் பெரும்பகுதி இன்னும் வங்காள பாஷையி லேயே இருக்கின்றன. மெய்ம்மையோ டியன்ற நல்வாழ்வில் நோக்கமுடையோர்க் கெல்லாம் நெறிகாட்டும் பேரொளியாம் அக்கவிவரர் மொழிகளை அனைவரும் அறிந்து பயனடையுமாறு அவர் கட்டுரைகள் பலவற்றை வங்காள பாஷையிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து இவ்விதழ்களில் தருவதற்குத் தலைப்பட்டுள்ளோம். இக்கருமத்தை அன்புடன் ஏற்றுக்கொண்டிருக்கின்ற எமது நண்பர் ஸ்ரீமான் E. W. அரியநாயகம் B. A., B. D., B. ED. (Edin); Diploma in Education (Cantab) அவர்களும் அவரது மனைவியார் ஸ்ரீமதி ஆஷாதேவி M. A. அவர்களும், தமிழுலகத்தைத் தமக்கு மிக்க கடப்பாடுடையதாக்கிக்கொள்கின் றனர் என்னல் மிகை. இவர் கவி இரவீந்திரநாதருடன் அவருடைய விச்வபாரதி வேலையில் ஈடுபட்டுப் பல ஆண்டுகள் சாந்திநிகேதனத்தில் இருந்தவர். கவியின் இதயம் தெரிந்துவரைந்த மொழிபெயர்ப்பா யிருக்கும் இவை. சென்னையிலும் சாந்திநிகேதன் போன்றவோர் ஸ்தாபனம் நிறுவும் நினைவுடன் இவர் இந்நகரிற்கு வந்திருக்கின்றனர் என்பதறிய எம்மைப்போல் யாவரும் மகிழ்வா ரென்பதில் ஐயமில்லை. "ஆசிரியர்"

மனுஷத்வம்

"உத்திஷ்டத! ஜாக்ரத"—எழுந்திரு, விழித்துக் கொள்—என்று ஒரு அசரீரி தொனிக்கலாயிற்று. இதனை, யார் கேட்டார், யார் கேட்கவில்லை என்று தெரியாது. எனினும்,"உத்திஷ்டத,ஜாக்ரத"என்னும் இம்மொழிகள் மீண்டும் மீண்டும் எம்முடைய கதவண்டைவந்து தட்டின. இம்மையில் விளையும்இடையூறு ஒவ்வொன்றும், வருத்தம் ஒவ்வொன்றும், விரோதம்ஒவ்வொன்றும்,நம்முடைய அந்தரங்க ஆன்மாவாம் வீணையின் உணர்வெனும் தந்திகளை எத்தனையோ ஆயிரம்முறை வருடிஇருக்கின்றது. அதன் பயனாக விளைந்து இசைத்த மொழிகள் இவை "உத்திஷ்டத ஜாக்ரத"—எழுந்திரு விழித்துக்கொள். கண்ணீர்த் திரளனைய சிசிரத் தாரைநீரினால் புனிதமாய ஊக்கம் புகட்டும் இந்த நவத்தொனியைக் கேட்கும்வண்ணம் இந் நிகிலமானது இமைத்தலின்றி எதிர்பார்த்திருக் கின்றது. இரவின் அந்தகாரம் ஒழிந்து, புனிதமான புதிய கதிரவனொளியால் நம்முடைய அபூர்வவிகாசம் விளங்கவருநாள் எந்நாளோ! நெடிது கிடந்துழன்ற நம் வேதனையின் பலன் தோன்றும்நாள் எந்நாளோ! எந்நாள் நம் கண்ணீரின் பலன் வாய்க்குமோ!

"அழகிய உதயகாலம் வந்துவிட்டது,இனி நீ மலர்வாய்" என்று ஒரு போதினை நோக்கிப் புகலவேண்டா. வனங்களில் இன்று விசித்திரமான புஷ்பங்கள் சிறிதேனுங் கஷ்டமின்றி மலர்ந்து, அகிலாண்ட மண்டலங்களின் அந்தரங்க ஆனந்தத்தை, வர்ணத்திலும் வாசனையிலும் அழகிலும் விகசிதமாக்கி, இனிமையின் மூலமாய் நிகிலத்துடன் தன் உறவினை நிலைபெறச் செய்திருக்கின்றன. இப்புஷ்பங்கள் தமக்கும் ஓர் தீங்கு செய்துகொள்வதும் இல்லை, பிறர்க்கேனும்யாதும் தீங்கு செய்வதும் இல்லை. மலரானது மிக எளிதில் தன் வாழ்வு நிறைவேறப் பெற்றுப் பரிபூரணமாகிப் பிரகாசத்துடன் மலர்கின்றது.

இதனைப் பார்க்கும்போது என் மனத்தகத்தே சிந்தனைகள் சில சுரக்கின்றன -என் ஜீவன் ஏன் அவ்வளவு எளிதில் அவ்வளவு பரிபூரணமாகி விகசிப்பதில்லை? இந்த ஜீவன்மாத்திரம் தன் இதழ்கள் முழுவதையும் மலர்த்தாமல் இறுகப்பிடித்துத்தனக்குள்ளே சிறைப்பட்டிருப்ப தேன். விடியற்காலத்தில், சூரியன் மிருதுவான தன் கிரணங்களைக்கொண்டு மெல்லமெல்ல ஜீவனின் இதயக் கதவினைத் தட்டி—"நான் என் சுதந்தரமாகிய கதிர்களை முழு ஆகாசத்துடனும் எவ்வண்ணம் கலந்திருக்கின்றனே, அவ்வண்ணமே நீயும் எளிதில்ஆனந்தமயமாகி விச்வாண்டத்தினுள் உன்னை முற்றிலும் ஒப்படை செய்துகொள்" என்று இனிது உரைக்கின்றது. இன்னதேபோல், இரவும், காலடிச் சத்தமின்றி மெல்லமெல்ல வந்து நட்புடன் அந்த ஜீவனைத் தொட்டு, "எவ்வண்ணம் நான் ஆழமறியா அந்தகாரத்தின் இடையே பேரொளி புகுவதற்கு என் சுதந்தர முழுவதையும் திறந்துகொடுத்திருக்கின்றேனே, அவ்வண்ணமே, நீயும் ஒருமுறையாவது நின் அவித்தையாம் அந்தகாரத்தின் மூலஸ்தானத்தின் கதவைச் சப்தமின்றித் திறந்து, உன் ஆன்மாவின் அளப்பரிய களஞ்சியத்தை ஒருமுகூர்த்தகாலமேனும் வித்தாரமான விச்வாண்டத்தின்முன் கொண்டுவா"- என்று சாற்றுகின்றது. புனிதமாய அகிலாண்டமானது தன் விசித்திரமான பரிசுத்தத்தின் மூலமாக நமக்கு நிமிஷந்தோறும் சொல்லித்தருவது இந்தத் திவ்ய வாசகமே—"மலர்வாய், மலர்வாய்; உன்னையே ஒப்படைத்துவிடு; சுய நன்மையைத் தேடுவதைப்போக்கி, இந் நிலநீர் ஆகாச உலகில், சுகதுக்கங்கள் நிறைந்த விசித்திரமான இம்மைவாழ்க்கையில், இன்னதென்று விவரித்து உரைக்கமாட்டாத பிரம்மத்தின் எதிரே ஒருமுறையேனும் உன்னை முற்றிலுந் துறந்திரு."

ஆயினும் என்! இடையூறுகளுக்கோ முடிவில்லை. உதயகாலப் புஷ்பம்போல் அவ்வளவு எளிதில் அத்துணை பரிபூரணமாக ஆன்மாவை ஒப்படைக்கமுடியவில்லையே. எனக்குள்ளே என்னையே தடைசெய்துவைக்கின்றேன். இதற்கிடையே, எட்டுத்திக்கிலும், நிகில ஆனந்தத்தின் கம்பீரம் வீணிலே சேதமாகிக் கழிகின்றது.

எனினும், வீண்போகிச் சேதமாகின்றதென்று எங்ஙனம் இயம்பலாம்? ஒவ்வொருமனிதனிலும் உள்ள நித்தியமான ஜீவன் அடைந்திருக்கின்ற பலன் இவ்வளவு என்று அதன் அளவை யார்தான் அளவிட்டு உரைக்கக் கூடும்? நமது ஜீவனே, புஷ்பத்தைப்போல் தோன்றியஇமைப்பொழுதிற்குள்ளே தன்பரிபூரணத்தை அடைந்து அழிந்துபோகும் தன்மையது அன்று. ஒரு நதியானது, மிக்க தூரத்திலிருந்து புரண்டொலி செய்து பாயும் தன் வெள்ளத்தை, விசித்திரமான பாதையூடே, எத்தனை எத்தனை பர்வதங்கள், வனங்கள், காடுகள் நகரங்கள் கிராமங்கள் இவைகளைக் கடந்து அலைமோதச்செலுத்தி, நீடிய தன் யாத்திரையின் முடிவில், அகலமுடைய தன் ஜலராசியை, நிமிடந்தோறும், சமுத்திரத்தினுள் சம்பூரணமாக ஒப்படைத்த வண்ணமே யிருக்கின்றது. இப்படி ஒப்படைக்கும் அதன் செயலிற்கோ ஓர் முடிவில்லை அமையாமற் பாயும் அதன் நீரின் பாய்ச்சலுக்கோ அந்த மில்லை. நதி என்று நின்ற அதன் எல்லைக்குள் எம்மருங்கும் எப்பொழுதும் அமைதியென்பது இருப்பதோ இல்லையே இல்லை. சாகரத்தைச் சேர்ந்து தன்னை அதனில் துறந்துகொண்ட பின்னரே ஆறுனது தனக்குரிய சாந்தியைப் பெற்றுத் தன்னை நிறைவேற்றிக்கொள்கின்றது. அவ்வாறே மனுஷத்வமும் விசித்திர மார்க்கமாக அகன்ற சிந்தையுடன் தன் மகத்தான நிறைவேற்றத்தை அடையவேண்டும். எனினும், அதனை அடைவதோ எளியதன்று. மனுஷத்வம் நதியின் கதியைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றது என்பது உண்மையே. எவ்வாறெனில், மனுஷத்வமும் நதியைப்போல், தன் சுய பலத்தினுலும் சுயவேகத்தினுலும்தான் செல்லுறு வழியைச் செய்துகொள்வ தன்றியும் அதனை அழகுறச் சித்தரஞ்செய்தும் செல்கின்றது. அணைகள் சில கட்டியும், சிலவற்றைஉடைத்தும், சிலஇடங்களிற் பிரிந்தும், சிற்சில இடங்களில் ஒன்றுகூடியும், புதிய புதிய இடையூறுகளுக் கூடேயும், அதிவேகத்துடன் சுழியிட்டுப் பாய்ந்து தன்னைத் தானே வித்தாரமாக்கி, சிருஷ்டிசெய்துகொண்டே யிருக்கின்றது. இறுதியில் எல்லைபற்ற தன் பரிபூரணத்தண்டை அது வந்து சேரும்போது, வேறுவேறுன தன் தன்மையெல்லாந் தாண்டி ஒன்றுபட்டபடியால், மகத்தான அவ்வொருதனி ஏகத்துடன் தன் ஒற்றுமை சம்பூரண மடைகின்றது. இடையூறுகள் இருந்ததில்லையாயின் அது ஒருபோதும் இவ்வகை வித்தாரம் அடைந்திருக்க இயலாது. வித்தாரம் அடைந்ததில்லையாயின் அதன் வளர்ச்சி ஏகத்தினுள் எய்திப் பரிபூரணம்அடையவும் இயலாது.

துன்பம் உளது. இம்மைவாழ்க்கையில் துன்பத்திற் கோர் முடிவில்லை. அத்துன்பத்தின் வன்மையாலும் வேதனையினுலுமே இம்மையில் அலகிலாப் படைப்பும் அழிவும் [illegible]டைபெற்றுவருகின்றன. இத்துன்பத்தால் அல்லும்பகலும் மோதியெழும் அலைகளின் ஒலிகளும் நிறங்களும் அவிநயப் பாவனைகளும் எத்தனை யெத்தனை! தோற்றம் எவ்வாருயினும், மனுஷத்வம் அற்பமே யாமாயின், மற்று, அற்பத்திலேயே அது தன் முடிவை அடையக்கடவதாயின், இம்மையாம் இவ்விசையினூடே,அபஸ்வரம் என்று கருதப்படும்துன்பமானது தோன்றியிருப்பதற்குஒரு பொருளில்லாமலேபோய்விடும். ஏனெனில், துன்பம் இருத்தலே மனிதனது பெருமைக்கு அடையாளமாய் நிற்கின்றது. துன்பமென்னும் அந்நன்னலம் அற்பருக்கு வாய்க்காது. பெரியோரின் கௌரவமே துன்பம். இம்மை வாழ்க்கையில், மகிமைவாய்ந்த துன்பங்களில் மகத்தானது மனுஷத்வமே. கண்ணீரே மஞ்சனப் புனிதநீராய் அதன் இராஜாபிஷேகம் செய்யப்படுகின்றது. மலரிற்குத் துன்பமில்லை. மனிதனின் துன்பம் பல்வேறு வகையானது, ஆழமுடையது, இனையதென்று அறிவதற்கு அதிகமும் அருமையானது. இம்மையின் எல்லையுள்நின்று அத்துன்பத்தின் வேதனையின்கோடியை முற்றிலுங் காணமுடியாது

(தொடரும்)

கலா நிலயச் சொல்லூடாட்டம் 2.

1	■	2	■	3		4	■	5	6
7			8		■	9			
	■	10			11		■		■
12	13		■	14		■	15		16
■		■	17					■	
18		19		■		■	20	21	
■	22		■	23					■
24		■	25			■		■	26
27					■	28		29	
■		■	30				■	31	

இடம்—வலம்

3. கெடுதி.
5. ஆசை. [த்தவர்.
7. சகுந்தலையை வளர்
9. விஞயகர்.
10. படித்தான்.
12. ஒரு கிரகம்.
14. விருக்ஷம்.
15. ஓர் உலோகம்.
17. தழுவாமல்.
18. பெண்.
20. கலியாணம்.
22. யானை.
23. ஓர் முனி.
24. இறக்க.
25. கடமை.
27. கேட்காதே.
28. சந்தனக் கலவை.
30. ஆட்டுமயிரால் நெய்
31. பாரம். [தது.

மேல்—கீழ்

1. முன் புறம்.
2. வெட்கப்படுவோன்.
3. நீக்குதல். [சன்.
4. ஓர் வேட்டுவ அர
5. அடைக்கலம்.
6. வழக்கெடுப்பவன்.
8. குடியிரு.
11. முருகக் கடவுளால் கொல்லப்பட்ட ஓர் அசுரன்.
13. இராமன் தங்கிய வனம்.
15. பணம் உடைய.
16. சீலை.
17. பறவை.
19. கடல்.
21. கோபம்.
23. கூத்து.
24. திறவுகோல்.
25. படிக்க.
26. இப்பிறப்பு.
28. மகிழ்.
29. பெண் மாடு.

கடைசிநாள்:—1934 வது வருடம், ஆகஸ்ட் மாதம், 16-ஆம் தேதி.

பரிசு:— கலாநிலயம். 1928, 1930, 1931, 1932, 1933, ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப்லெதர் - கில்ட் பைண்ட் வால்யூம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி1934ஞு ஆகஸ்ட்மீ 16உக்குள்எம்மிடம்சேரும்படி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனேடு நாலணுவுக்குக் காலணுத் தபால் தலைகள் (பதினறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணு பெறுமான போஸ்ட[illegible]ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்குமட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4 இவ்வண்ணம் எதனில் தொடங்கினுலும் அவ்வவ்முறை பரிசுபெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப்போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்தவருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை மானேஜர், கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

சொல்லூடாட்டம் 1.

நேரிய விடை யனுப்பியவர்:—V. மீனுக்ஷி சுந்தரம் ஐயர், திருமங்கலம்; G. கோகிலம், சென்னை; G. கிருஷ்ண மூர்த்தி, சென்னை. V. இராமாநுஜம், ஆலமரத்துப்பட்டி; U. N. அளகிரிசாமி நாயுடு, உடுமலைப்பேட்டை, V. R. சாரங்கபாணி, உடுமலைப்பேட்டை; T. L. இராமசுவாமி ஐயர், மாம்பலம்; முத்து Km. M. அருணசலம் செட்டியார், தேவ கோட்டை; ஸாம். S. வில்லியம், சென்னை. K. திருமலை ஜக்கையா, கோம்பை; N. ஜகநாதன், சென்னை.

பரிசு பெற்றவர்:—G. கிருஷ்ணமூர்த்தி, சென்னை.

குறிப்பு:—மேல்—கீழ். 16. 'அடைமானம்,' என்றதற்கு நேரிய விடை—பந்தகம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலே" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளீவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடுபல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L.61.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

82
M211, N28KN
199166

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

புகையும் பொருள்:—அமெரிக்காவில் மட்டும் சிகரெட்டுக்குச் செலவாகும் பணத்தைக் கொண்டு 615 கோடி ரொட்டித்துண்டுகள் வாங்கலாம். 18 கோடி ஜோடி செருப்புக்கள் வாங்கலாம். 9,22,400 மோட்டார் வண்டிகள் வாங்கலாம். 84,500 வீடுகள் கட்டலாம். 9,25000 இளைஞர்களுக்குக் கல்வி யளிக்கலாமென்று ஐக்கிய மாகாணச் சட்டசபையில் ஜனுப் அகமது ஷா சொன்னர்.

* * *

கணவனின்றிக் கர்ப்பம்:—ஆண் சம்பந்தமின்றி அமெரிக்கா போஸ்டன் நகரில் மட்டும் 75 பிள்ளைகள் நவீன சாஸ்திர முறையில் பிறந்திருக்கின்றனவாம். இந்தப் பிள்ளைகளைப் பெற்ற தாய்மார்கள் கலியாண மாகாத கன்னிப் பெண்களாம். ஆனல் இம்முறையில் பிள்ளைகளைப் பெறலாகா தென்றும் அவ்வாறு செய்கின்றவர்களுக்கு 100 பொன் அபராதமும் இரண்டரை ஆண்டு சிறைவாசமும் விதிக்கப்படவேண்டுமென்றும் அதிகாரிகள் ஒரு சட்டம் ஏற்படுத்தப் போகிறார்களாம்.

* * *

பாம்பின் அறிவு:—சென்ற வாரத்தில் கொழும்பு மிருகக் காட்சிச் சாலையிலிருந்து 22 அடி நீளமுள்ள சீயம் பாம்பொன்று காணமற் போய்விட்டது. அதிகாரிகள் பெரிதும் பீதி கொண்டு அதற்காக எங்கும் தேடினர். எனினும் அது அகப்படவே யில்லை. ஆனல், அதற்குணவு அளிக்கப்பட வேண்டிய தினத்தன்று அந்தப் பாம்பு தானகவே திரும்பி அந்தமிருகக் காட்சிச் சாலைக்கு வந்துவிட்டதாம்.

500 பொன் பூனை:—சென்ற வாரம் நீலகிரி கூனூரில் நடந்த தோட்டப் பொருட் கண்காட்சியில் சில அருமையான பூனைக்குட்டிகள் வந்தனவாம். அவை பாரசீக வம்சத்தைச் சேர்ந்தனவாம். அவற்றின் தாய் லண்டனில் நடந்த காட்சியில் சிறந்ததென்று பரிசுபெற்றதாம். 'மிஸ்சிவ்' என்ற பெயர் கொண்ட அந்தப் பூனையை அமெரிக்கர் ஒருவர் 500 பொன்னுக்குக் கேட்டும் சொந்தக்காரர் மறுத்துவிட்டாராம்.

* * *

பெரிய அபராதம்:—ஐரோப்பாவில் பேர் போன ஜென்னி டலி யென்ற சினிமாமாது ஐம்பதினுயிரம் பொன் மதிப்புள்ள ஒரு மோதிரத்தைச் சுங்கவரி கட்டாமல் திருட்டுத்தனமாக பிரான்சுக்குக்கொண்டு போனதற்காக ஒருலட்சம் நாற்பதினுயிரம் பொன் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்.

உயர்ந்த ஜாதி
பழமரக் கன்றுகள்
முறைப்படி வளர்க்கப்படுவன
பழமரங்கள் வைத்து வளர்ப்பதால் இலாபம்.
அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும்.
ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.
விலையும் நயம்!
ஜாதியில் உயர்ந்தது! ஒருபோதும் கெடாதது!!
தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது
தேசாயின் பழச்செடி தினுசுகளே.
உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.
நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார். தேவகோட்டை ராம்நகர் எக்ஸ்டென்ஷனில் பழத் தோட்டங்களும் அலங்கார நந்தவனங்களும் அமைத்துத்தரவும் மேற்பார்வை செய்யவும் ஏற்றுக்கொள்வார்.
D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.
தேசாய் அண்டு கோ.,
17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பங்களூர்.
D. T. DESAI & Co., 17, Cross Road, Malleswaram, BANGALORE

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
1933 Results.
New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.
Specialities.
Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.
For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*
Consult
NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.
A sound Company.
Please apply for particulars to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 58 வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at he B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)